# இன்னொரு அம்மா

 1 

"டிங் டிங் டிங்" என மணியடித்ததும், மாணவ, மாணவிகள் வெளிர் பச்சை நிற யூனிபார்மில் பட்டாம் பூச்சிகளாய், பிரேயருக்கு அணி வகுக்கத் தொடங்கினர்.

காலை வணக்கத்துடன் பிரேயர் முடிந்ததும், மாணவ, மாணவிகள் வகுப்புக்குச் செல்ல, வளர்மதி தன் வகுப்பான இரண்டாம் வகுப்பை நோக்கி நடந்தாள்.

"வித்யா..."

"எஸ் மேடம்..."

"கனிஷ்கா..." "எஸ் மேடம்."

"சுஜிதா...." "எஸ் மேடம்."



வளர்மதியின் பார்வை சுஜிதாவின் மீது நிலைத்தது. யூனிபார்மில் ஏகப்பட்ட மண் தீற்றல்.

நேற்றைய யூனிபார்மை அப்படியே போட்டு வந்திருக்கிறாள்.

நேற்றும் கூட, ரிப்பன் கட்டாமல் வந்ததற்கு அவளைத் திட்டியிருந்தாள்.

வளர்மதி அந்த வகுப்பிற்கு புதிதாக நியமிக்கப்பட்டிருந்தாள். பழைய வகுப்பாசிரியை நிர்மலா வேறு வேலை கிடைத்து பாதியிலேயே போய்விட, அந்த இடத்திற்கு இப்போது, இதோ வளர்மதி.

"சுஜிதா... ஸ்டாண்ட் அப்...!"

மலங்க, மலங்க, விழித்தபடி, வெறித்த பார்வையோடு எழுந்து நின்றாள், சுஜிதா.

"நேத்து நான் என்ன சொன்னேன்?"

– கேள்வி கேட்டுவிட்டு, அவளே தொடர்ந்தாள்.

"இன்று ஐடென்டிடி கார்டுக்கு போட்டோ எடுக்கப் போறாங்க... எல்லாரும் சலவை செய்த புது யூனிபார்மில் பளிச்சென்று வரணும்ன்னு சொன்னேனா, இல்லையா...?"

வளர்மதி முந்திய தினம் சொல்லியிருந்தாள்தான். ஆனால், அவள் யாரிடம் போய் சொல்லுவாள்?

சுஜிதாவிடம் அதே பழைய வெறித்தப் பார்வை.

தன் கேள்விக்கு பதிலில்லாது போனது வளர்மதிக்கு கோபத்தை உண்டு பண்ணியது.

"சுஜிதா... உன்னத்தான் கேக்கறேன்...! காதுல விழல..."

''மேடம்! வேலைக்காரி வரல. அதனால தான்... இழுத்தாள்.''

''வேலைக்காரி வரலைன்னா என்ன? உன் அம்மா தோய்க்கமாட்டாங்களா?''

''அப்பா வந்து...''

ஒருவேளை இந்தப் பெண்ணின் அப்பாவிற்கு உடம்பு சரியில்லையோ, என்னமோ...! அதனால், இவள் அம்மாவால் இவளை கவனிக்க முடியவில்லையோ?

''அப்பா வந்து நாளைக்கு தோய்ச்சு தரேன். இன்னிக்கு இதையே போட்டுண்டு போன்னு சொன்னாங்க, மேடம்...!''

மேடம் முழிக்க, சுஜிதா விம்மலை கஷ்டப்பட்டு அடக்க, உதவிக்கு வந்தாள், பவித்ரா. அந்த வகுப்பின் மாணவ, மாணவிகளின் தலைவி, துடுக்குக்கு பேர் போன பவித்ரா!

''மேடம்...! அவ அம்மா போன மாசம் செத்துப் போயிட்டாங்க...!''

## 2

**கா**லை 5 மணிக்கு டானென்று அலாரம் அடித்தாற் போல் முழிப்பு வந்தது, ஜனனிக்கு. கைகளைப் பரபர வென்று தேய்த்துவிட்டு அதில் தன் முகம் பார்த்தாள். காலை நேர வேலைகளை மனதிற்கு கொண்டு வந்து ஒத்திகை பார்த்தாள். இது இன்று நேற்றல்ல; பல வருடப்



பழக்கம். பக்கத்தில் தூங்கும் கணவனைக் காதலோடும், குழந்தைகளைப் பாசத்தோடும் பார்த்தாள். குழந்தைகளை நெற்றியில் முத்தமிட்டாள். சிணுங்கிய அவர்களை லேசாகத் தட்டிக் கொடுத்தாள். இரண்டு வருட இடை வெளியில் இரண்டும் பெண் குழந்தைகள்.

கணவனையும் நெற்றியில்... எழுந்த ஆவலை பிரயத் தனப்பட்டு அடக்கினாள். வேண்டாம். முத்தமிடுகையில் அவன் முழித்துக்கொண்டுவிட்டால் வேறு வினையே வேண்டாம்.

குறைந்தது அரைமணி நேரமாவது அவன் பிடியை விட்டு வரமுடியாது. எல்லாம் லேட்டாகிவிடும். நினைக் கும்போதே ஒரு குறுஞ்சிரிப்பு எட்டிப்பார்த்தது. ஒரு ஆறு வருஷ தாம்பத்தியத்தில் எப்படி கணவன் தன் மனதை முழுவதுமாக ஆக்ரமித்துள்ளான், என நினைக்கையி லேயே, வெட்கக்கீற்று புன்னகையாய் விரிந்து, இதழோரம் தோன்றியது.

ஜட்டியுடன் தூங்கிக் கொண்டிருந்த பெரியவளுக்கு, பிராக்கை நன்றாக இழுத்துவிட்டு விட்டு பெட்ரூம் கதவை மெல்ல சாத்தியவாறு, காலையின் வழக்கமான வேலைகளைத் துவங்கினாள்.

பெரியவளுக்கு இன்று பிறந்தநாள். பூச நட்சத்திரம். இருவருக்குமாக டிரெஸ் எடுத்திருந்தாலும், அதை இதுவரை காண்பிக்காமல் வைத்திருந்தாள், ஜனனி.

''நாளைக்கு மட்டும் நீ எனக்கு புது டிரெஸ் போட்டு விடல... பாரு...'' நேற்று கோபித்துக் கொண்டே, தூங்கிய மகளை நினைத்து சிரித்தவாறே, சமையலில் ஈடு பட்டாள். ''அம்மா...'' இடுப்பைக் கட்டிக்கொண்டவளைப் பிரித்து, அணைத்தவாறே, ''பட்டுக்குட்டி...! ஹேப்பி

பார்த்டே...! என்று கூறிவிட்டு, ''எங்கே, எப்பவும் போல, சாமி கும்பிட்டு, இன்னிக்கு பொழுது நல்லபடியா போகணும்னு நினச்சு வேண்டிண்டு வா...'' என்றாள்.

''அவ மட்டும் பட்டுக்குட்டியா?'' - சின்னவள்.

''ஆமா...! நீ செல்லக்குட்டி.''

இரண்டும் இடுப்பை கட்டிக்கொண்டு கொஞ்ச, ''ஹூம் போ...! இரண்டு பேத்தையுமே கொஞ்சிண்டிருந்தா, எனக்கு மிச்சமில்லையா...?''

கணவன் குமார், பொய்க் கொஞ்சலோடு கேட்க, காதலுடன் சிரித்தாள், ஜனனி.

அது வசீகரமாய் இருந்தது.

அவர்கள் நால்வரும் சிரித்தபடி இருக்க,

விதி அவர்களைப் பார்த்து சிரித்தது, அவர்களுக்கு பாவம் தெரியவில்லை.

''அம்மா...'' அலறலைத் தொடர்ந்தது, பதட்டமான குரல். ''அம்மா, அக்கா... கையில் ரத்தம்...''

## 3

ஸ்கூல் விட்டதும், ஸ்கூல் வேனில், கீரீச்சில் இறங்கிக் கொண்டாள், பூஜிதா. ஸ்கூல் பேகை, இழுத்து விட்டுக் கொண்டு, க்ரிச் கேட்டை தள்ளிக் கொண்டு நுழைந்தாள், தங்கையை அழைத்துக் கொண்டு, அடுத்த தெருவில் இருக்கும் அவர்கள் வீட்டிற்கு இருவருமாக நடந்து போவார்கள்.



''அக்கா...'' தேம்பி உடைந்த குரலில் சுஜிதா.

''அக்கா... இன்னைக்கில்ல மேடம் என் யூனிபார்ம் ரொம்ப அழுக்காக இருக்குன்னு திட்டினாங்க...

''எனக்கு அம்மா ஞாபகம் வந்துடுத்து...''

பேச வாயின்றி, தங்கையின் தலையைத் தடவி தன்னுடன் லேசாக அணைத்துக் கொண்டாள், பூஜிதா.

அவளும் இன்று ஹோம் வொர்க் செய்யாமல் திட்டு வாங்கியிருந்தாள்.

அது கண்டிப்புக்கு பேர்போன பள்ளி.

அவளோ, நான்காம் வகுப்பு.

அவளுக்கு ஹோம்வொர்க் செய்யாததற்கு பனிஷ்மென்ட் கொடுத்திருந்தால் கூடத் தேவலை, போலிருந்தது.

போன மாசம் வரை, ஒரு நாள் கூட ஹோம் வொர்க் செய்யாமல் போனதில்லை.

இவளுடைய சூழ்நிலை தெரிந்த வகுப்பாசிரியை, ஒரு பரிதாபப் பார்வை பார்த்துவிட்டு,

''ஏன், உங்க அப்பாவையாவது கேட்டு செய்யலாமில்ல?'' என்றாள்.

அப்பா வரவே, இரவு எட்டு மணியாகிறது. வந்து அவர் தனக்குத் தெரிந்தவரை இரவு சமையல் செய்து, தங்கையை ஹோம்வொர்க் எழுத வைக்கவேண்டும். அம்மாவை இழந்த துக்கம் அப்பாவை ரொம்பவே பாதித்திருந்தது. வகுப்பாசிரியை பார்த்த பரிதாபப் பார்வை, ரொம்பவே கழிவிரக்கத்தை உண்டு பண்ணியது.

''என்னக்கா.. யோசிக்கிறே...?''

''ஒண்ணுமில்ல சுஜா. எனக்கும் அம்மா ஞாபகம்...''

பேசாமலே இருவரும் சிறிது தூரம் நடந்தனர்.

''சுஜா...! நீ மத்தியானம் சாப்பிட்டியா...?''

வினாடி நேர தயக்கத்திற்கு பின்,

''இல்ல... தயிர்சாதம் புளித்துப் போச்சு... என்னவோ மாதிரி இருந்தது... கொட்டிட்டேன்...!''

பூஜிதாவும் சாப்பிட்டிருக்கவில்லை. நன்கு மசித்த சாதத்தில் தயிரும், பாலும் கலந்து, உப்பு பெருங்காயம் போட்டு தாளித்து அம்மா செய்யும் தயிர்சாதம் எப்படி மணக்கும்?

கலக்கத் தெரியாமல் அப்பா கலந்த தயிர்சாதமும் மணத் தது, புளித்த மணம். அப்பாவும் பாவம். அம்மா போன பின், அவர் துக்கத்தைக் கூட வெளிக்காட்டாது இருவரை யும் பார்த்துக் கொள்ள ரொம்பவே சிரமப்படுகிறார். முதலில் தயிர்சாதம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நினைத்துக் கொண்டாள் பூஜிதா.

திடுமென நினைவு வந்தாற்போல் கேட்டாள், சுஜிதா.

''அக்கா... உனக்கு மேகி பண்ணத் தெரியுமா...?''

''மேகி பண்ணி சாப்பிடலாமா...''

இதற்குள் வீடு வந்திருந்தது.

''ஓ, தெரியுமே...!''

சொல்லிவிட்டாளே தவிர, கொதிக்கும் தண்ணீரில் அம்மா மேகியைப் போட்டுக் கிளறுவதை அவள் பார்த் திருக்கிறாள், அவ்வளவே!

இப்போதைக்கு, லைட்டரைக்கொண்டு அடுப்பு மூட்டத் தெரியும்.



இரண்டு, மூன்று டப்பாக்களைத் தேடியபின், நாலா வது டப்பாவில் இருந்தது மேகி.

அடுப்பை மூட்டி தண்ணீர் கொதித்ததும் மேகியைப் போட்டாள்.

அடுப்பில் ஒரு பக்கமாக இருந்த, பாத்திரத்தை சரியாக வைக்க இடுக்கியை எடுத்தாள்.

பசி வயிற்றை கிள்ள, ஆவலோடு அவள் செய்வ தையே பார்த்துக் கொண்டு நின்றது, சுஜிதா.

இடுக்கி பிடி நழுவ, அப்படியே பாத்திரம் கவிழ சூடான மேகி தண்ணீருடன் பூஜிதா காலில் கொட்டியது.

''அம்மா.... ஆ....''

வலியின் வேதனை கண்களில் கண்ணீராய் கொட்டியது.

''அக்கா என்னக்கா பண்றது...'' என்ன செய்வதென்று தெரியாமல் அலைமோதினாள், சுஜிதா. ''அம்மா, ஒரு மஞ்சள் டியூப் வைத்திருப்பாளே, அது.. எங்கே?''

## 4

அலறல் சத்தத்தை கேட்டு, கணவனின் பிடியை தளர்த்திக்கொண்டு கிட்டத்தட்ட ஓடினாள், ஜனனி.

''ஐயையோ... என்னடி.''

''காலுல வெந்நீர் கொட்டிண்டுட்டேம்மா...''

அழுகைக்கிடையில் சொன்னாள், பூஜிதா.

''பாத்ரூமில் ஏது வெந்நீர்?''

யோசிக்கையில் நினைவிற்கு வந்தது.

கீழே துடைக்கும் துணிகள் ரொம்ப அழுக்காயிருப்ப தனால் அவற்றை வெந்நீர் வாஷிங் பவுடர் போட்டு அதில் ஊறவைக்கும் எண்ணத்துடன், வெந்நீரை வைத்து விட்டு அப்படியே மறந்துவிட்டிருந்தாள்.

"என்னங்க...! ஐஸ் கட்டிய எடுங்களேன்!"

"சுஜா...! ஹால்ல, மஞ்சள் கலர்ல ஒரு மருந்து ட்யூப் இருக்கும்பாரு. எடுத்துக்கொண்டு வா..." என்று ஆளா ளுக்கு விரட்டிக்கொண்டிருந்தாள், ஜனனி.

ஐஸ்கட்டி வைத்து அழுத்திவிட்டு, பின் மருந்தும் போட்டு விட்டதில், கொஞ்சம் கால் ஊன முடிந்தது.

"என்னடி பாத்துப் போகக் கூடாது...?"

"இல்லம்மா...! பச்சை தண்ணினு தான் நெனைச்சு பல் தேய்க்க எடுத்தேனா.. அப்போ..." முடிக்கவில்லை பூஜிதா.

"என்னமோ போ! பிறந்த நாளும் அதுவுமா... சரி, சரி சீக்கிரம் ரெடியாகு. கோயிலுக்கு போயிட்டு வந்துடலாம்."

காலை லேசாகத் தடவி விட்டவாறே முணுமுணுத் தாள், பூஜிதா.

"அம்மா, ஐயெம் லக்கி!"

காலிங் பெல் வீறிட, கதவைத் திறந்த சுஜிதா சந் தோஷக் கூச்சலிட, வீட்டின் மனநிலையே மாறிப்போனது.

"ஐ! தாத்தா! ஐ பாட்டி!"

"சுஜா குட்டி! ஹேப்பி பர்த்டே பூஜா குட்டி!"

குசலங்கள் விசாரித்த பின், ஜனனி அம்மாவைக் கேள்வியுடன் பார்த்தாள்.



"என்னம்மா! நேத்து நான் போன் பண்ணப்ப கூட, நீ வரதா சொல்லவேயில்லையே..."

"அதில்லைடி. உன் தங்கை வினயாவுக்கு திடீரென ஒரு வரன் அமைந்தது. சரி, உன்னிடமும், மாப்பிள்ளை யிடமும் சொல்லிவிட்டுப் போலாம்னு..." இழுத்தாள்.... அம்மா. என்ன இருந்தாலும், மூத்த பெண், மாப்பிள்ளை யாயிற்றே?

"எல்லாம் பேசி முடிச்சாச்சா?"

"ஓரளவுக்கு முடிஞ்சதுன்னு வைச்சுக்கயேன். மாப் பிள்ளை பையன் கம்ப்யூட்டர் இன்ஜினியர். டில்லியில் வேலை செய்யறார். கூடிய சீக்கிரம் லண்டன் போற வாய்ப்பு வரப்போகுதாம். ஐம்பது பவுன் போட்டு மூணு லட்சம், 1 கார் வாங்கித் தரச் சொல்றாங்க. அப்பாவும் யோசித்துப் பார்த்துட்டு சரின்னு சொல்லிட்டாரு...!" சொன்ன அம்மாவின் தலை சற்றே குனிந்தது. மகளின் மனப்போக்கு அம்மாவுக்கு தெரியாதா? தன் கல்யாணத் தின் போது, முப்பது பவுன் போட்டு கையில் 1 லட்சம் குடுத்து ஒரு பைக் மட்டுமே வாங்கி கொடுத்திருந்தது, அசந்தர்ப்பமாய் நினைவுக்கு வந்தது.

## 5

அக்கா பூஜிதாவிற்கு உதவும் நோக்கில் கப்போர்டில் ஏறி, சுஜிதா மருந்து ட்யூப் எடுத்து வந்தாள். அது அதிக பட்சம் பிதுக்கப்பட்டு உயிர்விடும் தருவாயில் இருந்தது.

பூஜிதா, அதைப் பிதுக்கி, இருந்த சிறிது மருந்தைத் தடவிக் கொண்டாள்.

எரிச்சல் நிற்கவில்லை.

பாவம், சுஜா.

பசி என்றாள். அவளுக்கு ஏதாவது செய்து தர வேண்டுமே!

அதற்குள் இப்படியாகி விட்டதே?

அப்பா வருவதற்குள் எல்லாம் சுத்தம் செய்துவிட வேண்டும்.

அம்மா இருந்தவரை, மாதா மாதம் மருந்து லிஸ்ட் போட்டு, அத்தியாவசியமான மருந்துகளை வாங்கிவிட்டு காலாவதி ஆன மருந்துகளைத் தூக்கிப் போடுவாள். ஹூம்...

பெருமூச்சு விட்டாள், பூஜிதா!

“தட்... தட்... தட்..” - கதவு தட்டப்பட்டது.

அப்பா வரும்வரை, அவர்கள் இருவரும் இருக்கும் போது, யார் வந்தாலும், ஜன்னல் வழியே, யார் எனப் பார்த்துவிட்டு பின்பு தான் கதவு திறக்க வேண்டும் என்று அப்பா சொல்லியிருந்தார்.

கதவு தட்டப்பட்ட விதத்திலிருந்தே, அது அப்பாதான் என தெரிந்துபோனது.

“தட, தட்” - கதவு மறுபடி தட்டப்பட,

திறந்தாள், சுஜிதா.

எப்போதும் போல, தளர்வான, சோர்வான நடையில், முகத்தில் அப்பாவை எதிர்பார்த்திருந்தவளுக்கு ஆச்சரியம்.

சிரித்த முகத்திலே, தெளிவான நடையில் அப்பா!

பின்னாலேயே, ஒரு ஆன்ட்டி.

“சுஜா, வழிய விடு!” அப்பா!



தன்னிச்சையாய் நகர்ந்தாள், சுஜா!

இருவரும் ஒன்றாகவே உள்ளே நுழைந்தாலும், நொடியில் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, சுதாரித்துக் கொண்டது, ஆன்ட்டி தான்!

‘‘அச்சச்சோ! நீ பூஜிதா தானே?’’

‘‘காலுல என்ன...? சூடா எதையும் கொட்டிண்டுட்டாயா...?’’

‘‘மருந்து ஏதாவது போட்டியா...?’’

சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டவள் கண்களுக்கு, முற்றிலும் பிதுக்கப்பட்டுத் தீர்ந்துபோன மருந்து ட்யூப் தென்பட்டது.

‘‘ஜெய்...! கொஞ்சம் இட்லி மாவு, தோசைமாவு, ஏதாவது இருக்குமா?’’

‘‘இதோ..! ஃபிரிஜ்ஜில் தோசை மாவு இருக்குன்னு நினைக்கிறேன்...!’’

நேற்று பாக்கெட் தோசை மாவு வாங்கி குழந்தைகளுக்கு தோசை வார்த்துக் கொடுத்தது போக மீதமிருந்தது கை கொடுத்தது.

கொஞ்சம் போல, மாவை ஸ்பூனில் எடுத்து, மாகி கொட்டின இடத்தில் காலில் தடவி விட்டாள்.

‘‘அப்பாடா...!’’

ஜில்லென்று மாவு பட்டவுடன், வலியும் குறைந்தது. எரிச்சலும் நின்றது.

அம்மாவும் இப்படித்தான்!

நொடியில் கை வைத்தியம் செய்துவிடுவாள்!

இப்போது தான் தனக்கு உதவிய ஆன்ட்டியை உற்று நோக்கினாள் பூஜிதா.

அம்மாவை விட சற்று உயரம்.

அம்மாவை விட சற்று நிறம் கம்மி.

அழகான கத்திரிப்பூ கலர் புடவையை நேர்த்தியாக உடுத்தியிருந்தாள்.

அம்மா கூட அப்படி அப்பாவை ஜெய் என அழைத்த தில்லை.

சின்ன பொட்டு, புருவங்களுக்கு மத்தியில் ''யார் இவள்...?''

# 6

**வீ**ட்டின் உள்ளே நுழைந்து செருப்பை அவிழ்க்கும் போதே, ஜெயக்குமாருக்கு வீட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவுவதை உணர முடிந்தது.

பட்டுப்புடவை, தலையில் பூவுடன், சிவந்த கண் களுடன் ஜனனி.

சில வினாடி யோசனையிலேயே புரிந்து போனது அவனுக்கு,

ஜனனி அன்று தன் தோழியின் திருமண ரிசப்ஷ னுக்கு அவசியம் வர வேண்டும் என்று வற்புறுத்தி யிருந்தாள். ஜெயக்குமார் ''மாலை 5 மணிக்கு அழைத்துப் போகிறேன்... ரெடியாக இரு...'' என்று கூறிவிட்டு, இப்போது உள்ளே நுழையும் போதோ மணி 6.30.

இவனைக் கண்டவுடன், 'டங்' கென்ற சப்தத்துடன் காபி டம்ளர் டேபிளின் மேல் வைக்கப்பட்டது.

பெட்ரூமிற்குள் சென்று கதவை ஒருக்களித்து சாத்தி விட்டு ஜனனி, படுக்கையில் வீழ்வது தெரிந்தது.



'ச்சே.. என்ன வாழ்க்கை.'

ஆபீஸில் திடீரென்று சர்ப்ரைஸ் ஆடிட் வந்துவிட்ட தால், மதியத்திற்கு மேல் மூச்சு விடக்கூட முடியவில்லை.

இவன் பொறுப்பான பதவியில் இருப்பதால், ஆடிட் வந்திருந்தவர்களுக்கு, எல்லாம் எடுத்துக்காட்டி எல்லாம் சரியாக இருக்க வேண்டுமே என்ற கவலை வேறு...!

எல்லாம் சேர்ந்ததில், ஜனனியிடம் வருவதாகச் சொன் னதே மறந்துபோனது.

ஜனனியின் எதிர்பார்ப்பும் தெரியாமலில்லை.

பின்னோடு சென்று, சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பாள்.

எந்த சமாதானம் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் அவள் இல்லை எனத் தோன்றியது.

அவளும் பாவம். எப்போதோ ஒருநாள் வெளியே விசேஷம் என்று போகிறாள்... அதுவும் போக முடியா விட்டால், தாறுமாறாகக் கோபம் வருகிறது.

ஆனால், அவன் சூழ்நிலையையும் கொஞ்சம் புரிந்து கொள்ளலாமில்லையா?

ஜனனி, எப்போதும் இப்படித்தான்.

அவன் மீது அளவு கடந்த ஆசை.

திடுமென வந்து தானாகவே கட்டிக்கொள்வாள்.

ஞாயிறன்று ஜெயக்குமாருக்கு பிடித்ததாக செய்து அசத்துவாள்.

பிறந்த நாளுக்கு விலையுயர்ந்த சர்ட் எடுத்து, சர்ப் ரைஸாகக் கொடுத்து திணற வைப்பாள்.

அத்தகைய பாசத்திற்கும், காதலுக்கும் அவனிடம் எதி பார்ப்பது நடக்காமல் போனால், ஜனனி பத்ரகாளிதான்

சென்ற வாரம் கூட, ஜனனி ஆசைப்பட்டாள் என்பதற்காக கோயிலுக்கு அழைத்துப் போய்விட்டு, ஏதும் விசேஷமில்லாவிட்டாலும் கூட, கடையில் பார்த்த ஆகாய வண்ண ஜார்ஜெட் அவளுக்கு அழகாயிருக்கும் என வாங்கிக் கொடுத்து, ஹோட்டலுக்கும் அழைத்துச் சென்று சந்தோஷப்படுத்தியது எல்லாம் நினைவிற்கு வந்தது.

அவளுக்கும் நினைவிற்கு வந்திருந்தால் இப்படிக் கோபித்துக் கொண்டு முகத்தைத் தூக்க மாட்டாள்.

கோபம், வந்துவிட்டால், எதையும் யோசிக்காமல் பிடிச்ச முயலுக்கு மூணே கால் என்பது, ஜனனியிடம் இவனுக்கு பிடிக்காத ஒன்று.

''ஜனனி கண்ணு''

மெல்ல தலையைத் தடவிக் கொடுத்தவாறு,

ஆரம்பித்தவனை, கோபமாக ஏறிட்டாள்.

கையைத் தட்டிவிட்டாள்....

''நீங்க ஒண்ணும் என்னை சமாதானப்படுத்த வேண்டாம்.''

''என்னை விடுங்க...! நான் செத்தாதான் உங்களுக்கு நிம்மதி...''

''ஸாரிடா...! திடீரென்று ஆபீஸில் ஆடிட் பீப்பிள் வந்துட்டதால, என்னால சீக்கிரம் கிளம்ப முடியல...''

''ஏன் லேட்டாகும்னு நீங்க போன் பண்ணி சொல்லியிருக்கலாமில்ல...''

'அப்படி போன் பண்ணக்கூட டைம் இல்லை என்று கூறினால், நம்பப் போகிறாளா என்ன? ஏன் இவள் தன் செல் போனிற்கு அழைத்து நேரமாச்சே.. இன்னும் காணலியே என்று கேட்டிருக்கலாமே...' என்று கேட்க நினைத்தான். வேண்டாம். பிரச்சனை இன்னும் பெரிதாகத்தான் ஆகும்.



இப்போதைக்கு இவளை சமாதானப்படுத்த வேண்டும்.

''சரி... சரி.. என் மீதுதான் தப்பு.. ஸாரி...'' இறங்கி வந்ததும் தான், இவன்பக்கம் முகம் திரும்பினாள்.

''சரி, உடனே கிளம்பு.. ஆட்டோ பேசி போய் வந்துவிடலாம்... என்ன, இருநூறு கேட்பான்... போனால் போகிறது...!''

''என் ஜனனிக்கு இதுகூட செய்யமாட்டேனா.'' எனவும் தான் அவள் முகம் மாறியது.

கல்யாண ரிசப்ஷனுக்கு ஆசையாக கிளம்பிய குழந்தைகள், பெரியவர்களுக்குள் சண்டை என்றதும்,

''சரி இனி போகப் போவதில்லை...'' என நினைத்திருந்தன.

சின்னவள், ''ஐ! அக்கா அம்மா சரியாயிட்டா... வா. கிளம்பலாம்.'' என்று குதித்துக்கொண்டு கிளம்ப, ஜெயக்குமார் மனதில் மட்டும் கேள்வி,

''இவ்வளவு பிடிவாதம் எங்கே போய் முடியுமோ?''

## 7

குழந்தைகளுக்கு அதிக சஸ்பென்ஸ் வைக்காமல், ஜெயக்குமாரே சொன்னான் - ''பூஜா, சுஜா...! இந்த ஆன்ட்டி சௌக்யா... என்னோட வேலை பாக்கறாங்க. உங்களைப் பாக்கனுன்னாங்க...!''

''சௌக்யா...! இவ பூஜிதா... சின்னவள்... சுஜிதா...!''

குழந்தைகள் நன்றாக ஒட்டிக் கொண்டன. அம்மாவின் சாயல் சௌக்யாவிடம் இருப்பதைப் போன்ற ஒரு உணர்வு.

''சரி, சரி...! மூன்று பேருமா, மாகி சிந்தின இடத்தை சுத்தம் செய்யலாமா.''

சௌக்யா கேட்டவுடன் தான் அந்த வேலை நினை விற்கு வந்தது.

''பூஜா... நீ ஒரு பக்கெட்டில் அரைவாளி தண்ணீர் கொண்டு வாயேன்.''

''சுஜா.. நீ துடைக்க ஒரு கைத்துணி கொண்டு வாயேன்...''

அம்மாவும் இப்படித்தான், வேலை வாங்குவது தெரி யாதவாறு.. வேலை வாங்குவதில் கெட்டிக்காரி...!

இரண்டு பேருக்கும் ஒவ்வொரு நொடியிலும், ஒவ் வொரு செயலிலும் அம்மா தெரிந்தாள்.

பத்து நிமிட வேலைக்கப்புறம் அடங்கியிருந்த பசி எட்டிப் பார்த்தது.

''உங்களுக்கு பசிக்குமேன்னு அப்பா, ஹோட்டலி லிருந்து பூரி, கிழங்கு வாங்கி வந்திருக்கேன், சாப்பிட வாங்க...''

பசித்த வயிற்றிற்கு அமிர்தமாயிருந்தது, பூரி கிழங்கு.

சுஜிதாவிற்கு சௌக்யா வாய் அலம்பி விட்டு, தன் னிச்சையாய் புடவைத் தலைப்பால் துடைத்து விட்ட போது, அவளுக்கு அம்மா வாசம் அடித்தது.

சிறிது நேரத்தில் கிளம்பி விட்டாள்... சௌக்யா,

அப்புறம்,

''ஹேப்பி பர்த்டே... பூஜா குட்டி...''

கிப்ட்டுடன் பூஜிதா பார்த்டேக்கு ஒருமுறை...

''மழையாயிருந்ததா.. பக்கத்துலேயே, சுஜா வீடாச்சே...ன்னு ஆன்ட்டி வந்துட்டேன்.''

- மழை நாளில் ஒரு முறை என,



சௌக்யாவின் வருகை அடிக்கடி என்றானது.

அம்மாவின் ஏக்கத்தைவிட்டு விடுபடாத குழந்தை களுக்கு அவள் வருகை,

ஒரு வடிகாலாக இருந்தது.

அன்று, தன் பிறந்தநாள் என்று, கேசரியும், வடையும் செய்திருந்தாள், சௌக்யா. சனிக்கிழமை அரைநாள் என்பதால், அலுவலகம் முடிந்து வந்து செய்ய, மணி நாலாகிவிட்டது.

சரி...! ஜெய்க்கும், குழந்தைகளுக்கும் அவற்றை கொடுத்துவிட்டு தானும் சிறிது நேரம் இருந்து வரலாமே... எனத் தோன்றியது.

அவளுக்கும் அவர்களை மிகவும் பிடித்துப்போனது. ஜெய்யின் குழந்தைகள் என்பதாலோ என்னமோ? ஒரு விவரிக்க இயலாத கூடுதல் அன்பு. வீட்டின் காலிங் பெல்லை அடிக்க,

முற்பட்டவளை, உள்ளேயிருந்து வந்த பேச்சுக்குரல் நிதானிக்க வைத்தது.

''நீ சொல்ற மாதிரியெல்லாம் இல்ல... உளறாதே...'' பூஜிதா.

''இல்லக்கா...! பின்னே அந்த மாமி சொன்னாளே... அக்கா... அப்பா நம்மள விட்டுட்டுப் போயிடுவாரா...''

''அசடாட்டம் உளறாதே... பூஜி! அப்பா கேட்டா, ரொம்ப வருத்தப்படுவார்... அப்பா நம்மளை எவ்வளவு நல்லா பார்த்துக்கறார். முன்னல்லாம் உம்மென்று எந்த நேரமும் அம்மா பற்றியே நினைத்துக் கொண்டிருந்த அப்பா.. இப்ப சௌக்யா ஆன்ட்டி வந்தப்புறம் தானே.. கொஞ்சம் சிரிச்சிப் பேசறார்...''

''அப்பாகிட்ட நான் அந்த மாமி சொன்னதை சொல்லிடவா...''

''அதெல்லாம் வேண்டாம்... பெரிய மனுஷி மாதிரி எதையாவது செய்யாதே... உனக்கு சௌக்யா ஆன்ட்டி வரது பிடிச்சிருக்குல்ல...''

தயக்கத்துடன் பதில் வந்தது.

''உம்... பிடிச்சிருக்கு...''

''பின்ன என்ன? உங்காத்துக்கு அடிக்கடி வராளே... உங்க அப்பா கூட வேலை பண்ற ஆன்ட்டி அவ அப்பாவ கைக்குள்ள போட்டுண்டுடப் போறா? எதுக்கும் ஜாக்கிரதையா இருங்கோன்னு மாமி... சொன்னதை மறந்துடு... சரியா.''

''.ம்... சரி இந்த ஹோம்வொர்க் எழுத ஹெல்ப் பண்றியா...''

குழந்தைகள் மனதில் விஷம் தோய்த்த வார்த்தைகளை விதைத்த அந்த முகம் தெரியாத மாமி மீது சௌக்யாவிற்கு கோபம் வந்தது.

நான் யார் என்று இந்தக் குழந்தைகளுக்குத் தெரியுமா...?

தெரிந்தால்... இந்த அன்பு.. நீடிக்குமா... பயம் கலந்த கேள்வி மனத்தில் எழும்பியது.

## 8

வினயாவின் நிச்சயதார்த்தம் முடிந்து, ஆட்டோவில் வரும்போதே ஆரம்பித்துவிட்டான், குமார்.



''ஜனனி! நீ செய்யறது உனக்கே நல்லா இருக்கா...? பங்ஷன் முடியவே, ஒன்பது மணியாயிடுத்து...! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே! இருந்துட்டு காலைல போலாம்னு உங்கப்பா எவ்ளோ சொன்னார்.''

''பிடிவாதமா உடனே கிளம்பனுன்னு கிளம்பி, இப்பப் பாரு மணி பத்தாறது. நகை வேற போட்டிருக்க. ஆட்டோ டிரைவர் முழியே சரியில்ல.''

கடைசி வார்த்தைகளை அவளுக்கு மட்டுமே கேட்குமாறு முணுமுணுத்தான்.

வீடு போய் சேர்ந்தும் கூட, அவள் பேசாமலே இருந்தது, எரிச்சலை உண்டு பண்ணியது.

குழந்தைகள் இரண்டும் தூங்கி வழிந்தன.

''ச்சே...! காலையிலேயே வந்திருக்கலாம். சொன்னா கேட்டாதானே...''

''இங்க பாருங்க...! ஜாடையா ஏதும் பேசவேண்டாம். ஏதுன்னாலும், நேரடியா பேச வேண்டியது தானே...?''

''நேரடியாவே கேட்கறேன். போனதோ, உன் தங்கை நிச்சயதார்த்தம். உன் முகத்தைப் பார்த்தா அந்த சந்தோஷமே, துளி கூட இல்லை...''

''உங்க அப்பா அவ்வளவு சொல்லியும் கேட்காம, கிளம்பியே ஆகணும்னு பிடிவாதமா கிளம்பிட்டே...?''

''மரியாதை இல்லாத இடத்துல நமக்கென்ன தங்கல் வேண்டியிருக்கு...''

''யாருக்கு என்ன, இப்போ, மரியாதை குறைச்சல்? உன்னை யாரு என்ன சொன்னாங்க?''

''எனக்கு ஏதும் மரியாதை இல்லன்னாக் கூட பரவாயில்லை...'' என்று இழுக்க,

குமாருக்கு பொறுமை போனது.

"இங்கபாரு... மனசுல என்ன இருக்கோ, அந்த விஷயத்துக்கு வா..."

"சபையில, மாப்பிள்ளைக்கு ட்ரஸ் வைத்து கொடுக்கும் போது உங்களை, வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளையை, கூப்பிடவேயில்லை, கவனிச்சீங்களா."

"இதுல என்ன இருக்கு...அப்போ சுஜா அழுதான்னு நான் வாசல்ல வைச்சு சமாதானப்படுத்திக்கிட்டிருந்தேன். கண்ணுல தென்படாததுனாலே, கூப்பிடாம விட்டிருப்பாங்க."

"சரி, அத விடுங்க... நிச்சயப் பத்திரிகை படிக்கும்போது தான் நமக்கு கல்யாணத் தேதியே தெரியும். ஒரு மரியாதைக்காகவாவது, நம்மை இந்தத் தேதி வைச்சிருக்கோம்... சரிப்படுமான்னு கேட்டாங்களா எங்க அப்பா, அம்மா...!"

"இதென்ன கண்ணு மரியாதை குறைச்சல். கல்யாணம் பண்ணிக்கப்போற வினயாவைக் கேட்கணும். உன் அப்பா, அம்மா அவங்க சௌகர்யத்தைப் பார்க்கணும். எப்படியும் ஜூலை 5ம் தேதி தானே வைச்சிருக்காங்க. அந்தத் தேதில நமக்கொன்னும் அசௌகரியமில்லையே..."

"இப்படி நீங்க வெகுளியா இருக்கறதுனாலே தான் என்னைத் தவிர யாருமே உங்களை மதிக்க மாட்டேங்கறாங்க... இப்போ, வினயாவுக்கு ஐம்பது பவுன் போட்டு, மூணு லட்சமும் கொடுத்து, காரும் கொடுக்கப் போறாங்களாம்.. கேட்டீங்கள்ள.., அவ என்ன என்னை மாதிரியா... மாசமானா இருபதாயிரம் சம்பளம் வேற வாங்கறா..."

ஆக பூனை வெளியே வந்துவிட்டது. இதுதான் அவள் மனதை உறுத்திக் கொண்டிருந்ததா...?



"இதோ பார் ஜனனி...! நான் உன்னை சந்தோஷமா வைச்சிண்டிருக்கேனா, இல்லையா?"

"அதெல்லாம் ஒரு குறையும் இல்ல.. இருந்தாலும்."

"இருந்தாலும் இழுக்காத... உனக்கென்ன குறை? நான் உன்னை நல்லா வைச்சுக்கலையா, மணி மணியா, இரண்டு பெண் குழந்தைகள், நமக்கு! வேறென்ன வேணும். பாரு, பணம், காசு, நகை இதிலெல்லாம் சந்தோஷம் இல்லை. உன் மேலே உயிரையே வைச்சு உன்னையே சுத்தி சுத்தி வரேனே... வேறென்ன வேணும் உனக்கு."

"என்ன தான் சொல்லுங்க எனக்கு மனசு சமாதானமே ஆகல... நான் எங்கம்மாகிட்டயாவது இது பத்தி பேசத் தான் போறேன்..."

"பேசு.. நல்லாப் பேசி, சண்டை போட்டுண்டு வா.. என்னை சொந்த மகன் போல நினைக்கும் அத்தை, மாமாக்கு தலை குனிவு ஏற்படுத்தறதுன்னு முடிவு பண்ணிட்டயில்ல... அப்புறம் உன் இஷ்டம்..."

கோபமாக சொல்லிவிட்டு, திரும்பியும் பார்க்காமல், கழற்றின சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு கதவைப் படாரென சாத்தியவாறு வெளியே போனான், குமார்.

## 9

நாட்கள் செல்லச் செல்ல பூஜிதா, சுஜிதா இருவருமே தாங்களே, தங்களை கவனித்துக் கொள்ளப் பழகியிருந்தனர். மனித இயல்பே விசித்திரமானது. இதோ பூஜிதா 6ம் வகுப்பு, சுஜிதா 4ம் வகுப்பு. தானே யூனிபார்ம் போட்டுக் கொண்டு, தட்டை அலம்பி வைத்துக்கொண்டு,

அக்காவை கூப்பிடும் சுஜிதாவா, சின்ன வயதில், அம்மா மைய பிசைந்து ஊட்டும் சாதத்திற்கு வாயை திறக்க, அழிச்சாட்டியம் பண்ணினாள், என்றிருக்கும், பூஜிதாவிற்கு. தான் மட்டும் என்ன? கொஞ்சமா அம்மாவைப் படுத்தி யிருப்பாள்.

காலை ஏழு மணி. ஜனனி இறக்கை கட்டிக்கொண்டு பறக்கும் நேரம்.

ஒரு அடுப்பில் குக்கர். ஒரு அடுப்பில் குழம்பு, கொதித் துக் கொண்டிருக்கும். இடையிடையே இரு குழந்தை களுக்கு குளிப்பாட்ட வேண்டும்.

இத்தனைக்கும் நடுவே, பூஜிதாவிற்கு அப்போதுதான் நினைவிற்கு வரும், வகுப்பில் மேடம் வாகனங்கள் சிலவற்றின் படத்தை ஒட்டிக் கொண்டு வரச் சொன்னது நினைவிற்கு வரும்,

''ஏண்டி! நேத்தைக்கே சொல்லியிருக்க வேண்டியது தானே...! இப்ப கடைசி நிமிஷத்துல சொல்றயே... இன் னைக்கு என்ன ஆனாலும் சரி நான் ஒட்டித்தரமாட்டேன். அப்படியே போ. போய் திட்டு வாங்கினாத்தான் புத்தி வரும்'' என்று அம்மா ஜனனி புலம்பிக் கொண்டே இருந் தாலும், பூஜிதா அசர மாட்டாள். அவளுக்குத் தெரியும். அம்மா வீட்டு வேலையையும் கவனித்துக் கொண்டு, அவர்கள் இருவரையும் ரெடி செய்து கொண்டே பழைய கதைப் புத்தகங்களைப் புரட்டி புரட்டி எப்படியாவது அவள் கேட்ட வாகனங்களின் படத்தை ஒட்டிக் கொடுத்து விடுவாள் என்று.

ச்சே! இப்போது, அப்பாவிடம் காசு வாங்கிக்கொண்டு போய், ஸ்கூல் கேன்டினில் படங்கள் வாங்கி தானே ஒட்டிக்கொண்டு... ஒரு முறை ஒட்டத் தெரியாமல் ஒட்டி,



இரு பக்கங்களும் ஒட்டிக்கொண்டு பிய்ந்தபோது, அழுகையாக வந்தது.

காலையிலிருந்தே, பூஜிதாவிற்கு அடி வயிற்றில் சுரீரென்று வலி. அப்பாவிடம் சொல்லலாமா என யோசித்து உடனே அதைக் கைவிட்டாள். அவர் பாவம் பயந்து விடுவார். நேரம் ஆக ஆக வலியின் தீவிரம் அதிமானது. உடம்புக்குள் ஏதோவொரு மாறுதல் உடம்பு சூடு ஜாஸ்தியானால் வரும் வலி மாதிரி தெரியவில்லை. அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

இப்போது சௌக்யா ஆன்ட்டி பக்கத்தில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதற்குள் அப்பாவிற்கு நியூஸ் போய்விட்டது. உபயம், சுஜிதா.

''என்னடா, கண்ணு! சுஜிதா என்னன்னவோ சொல் றாளே...! என்ன பண்றது உனக்கு? பேசாமா படு. ஸ்கூலுக்கு லீவு போட்டுக்கலாம்.'' மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போன ஜெயக்குமாரை இடைமறித்தாள், பூஜிதா.

''அப்பா எனக்கு வயிறெல்லாம் வலிக்குது... பயமா இருக்கப்பா... ப்ளீஸ் எனக்கு சௌக்யா ஆன்ட்டியைப் பாக்கணும் போலிருக்கு. அவங்களை வரச் சொல்றீங்களா...''

''இதோ சொல்றேண்டா...'' என்றவாறே செல்லைக் கையில் எடுத்த ஜெயக்குமாருக்கு ஏதோவொன்று புரிந் ததைப் போலிருந்தது. அதுதானோ.. இது என்ற குறு குறுப்பு மனதில். பெண் குழந்தையைப் பெற்ற அப்பா வும், அம்மாவும் ஏதோ ஒரு காலகட்டத்தில் எதிர்கொள்ள வேண்டிய தருணமல்லவா...?

சௌக்யாவிற்கு போன் செய்துவிட்டு அவன் சிந்தனை யில் விழ, பூஜிதாவும், சுஜிதாவும் பயத்தில் அழ, பூரண அமைதி சிறிது நேரம் நிலவியது.

# 10

ஜெயக்குமார் சட்டையைப் போட்டுக்கொண்டு கிளம்பிப் போனதும், அதை எதிர்ப்பார்க்காத ஜனனிக்கு சிறிது நேரம் பிரமை பிடித்தது போலிருந்தது. சில நிமிஷங்களி லேயே சுதாரித்துக் கொண்டவுடன், கதவைத் தாள் போட்டு விட்டு குழந்தைகளின் அருகே படுத்துக் கொண்டாள்.

ஜெய் எப்போதும் இப்படித்தான். சட்டென்று கோபித்துக் கொள்வானே தவிர, அவன் கோபம் சிறிது நேரம் கூட நீடிக்காது. மறுநாளே, ஜனனி குட்டி என்று வந்துவிடுவான்.

ஜெய்க்கு மட்டுமென்ன, தனக்கும் கூட, அவனிடம் பேசாமல் இருக்க முடியாது. யோசனையிலேயே படுத்தவளுக்கு உறக்கம் சற்று பிடிக்கும் போது சின்னவள் சுஜிதா சிணுங்கினாள்.

''ஐயோ... குழந்தை ஒண்ணும் சாப்பிடலே.. பாலாவது குடுக்கலாம்'' என்ற எண்ணம் தோன்றிய போதே இதுவும் உறைத்தது.

'அட ராமா...! காய்ச்சின பால் பூரா உறை விட்டா யிற்றே... புதுசா ப்ரிஜ்ஜிலிருந்து பாக்கெட் எடுத்து காய்ச் சணும்' என்று நினைத்தவாறே செயலில் இறங்கினாள்.

சிணுங்கின குழந்தையை லேசாக தட்டிக் கொடுக்க தூக்கத்திலும் அம்மாவின் ஸ்பரிசம் உணர்ந்த சுஜா, காலை குறுக்கிக் கொண்டு தூங்க ஆரம்பித்தது. தூக் கத்தை மீறி குழந்தை முகத்தில் பசியின் ரேகை.

அடுத்த முறை சிணுங்குவதற்குள், பாலைக் காய்ச்சி ஆற வைத்து எடுத்து வரவேண்டும்.. பாலைக் கட் பண்ணி, அடுப்பில் வைத்துவிட்டு, மேடையில் சாய்ந்து நின்றவளின் மனம் யோசனையில் விழுந்தது.



ஜெய்குமாரிடம் ஒரு பழக்கம்.. ஆரம்பத்தில் உன் பேரில்தான் தப்பு.. என்று, ஆரம்பித்து, படபடவெனப் பொரிந்தாலும், இவள் முகம் வாடுவதை அவனால் சகிக்க முடியாது.

எல்லாம் சில மணி நேரம்தான். தானாகவே வந்து, ''ஜனனி குட்டி... ஸாரிடா.. ஏதோ டென்ஷன்ல பேசிட் டேன். தப்பு என் பேர்ல தான். மனசுல வைச்சுக்காதடா...'' என உருகிப் போய்விடுவான்.

ஜனனிக்கும் அவ்வளவு நேரம் முறுக்கிக் கொண் டிருந்த மனசும், உடம்பும் அவன் அணைப்பு தந்த ஸ்பரி சத்தில் வெண்ணையாய் அவன் கைகளில் உருகிவிடும்.

இப்போது கூட அப்படித்தான். ''ஜனனி கண்ணு'' என்று தேடி ஓடி வருவான். தூங்கிவிட்டாற் போல் இருக்க வேண்டும். எழுப்பியாவது ஜெய் சமாதானம் செய்யும் அழகே தனி. நினைவில் மூழ்கியவளிடம் இருந்து லேசாக புன்சிரிப்பு வெளிப்பட்டது.

அதே நேரம் கேஸ் பர்னரை அதிகபட்ச ஜுவாலையில் வைத்துவிட்டு, பக்கவாட்டில் நின்றிருந்த ஜனனி, மிக அருகில் வெப்பத்தின் அருகாமையை உணர்ந்து, திரும்பிப் பார்ப்பதற்குள், பட்டுப்புடவையின் நுனியை தீ ருசி பார்க்க ஆரம்பித்துவிட்டது. பட்டுப்புடவையின் தன் மைக்கு தீ எளிதில் பரவ, ஜனனியால் நொடிப்பொழுதில் சுதாரித்துக் கொண்டாலும் கூட கத்த வாய் எழும்பவில்லை.

பால் பொங்கி வழிந்து, பர்னர் அணைந்துவிட, அது வழியே லீக்கான கேஸ் இன்னமும் புடவை எரிய துணை போனது.

''ஐயோ.. அம்மா...! பூஜா எழுந்திரேன் ஜெய்... சுஜா...'' வாய்க்கு வந்த பேரையெல்லாம் கூப்பிட்டும் பிரயோச

மில்லை. பூஜாவோ, நன்கு அலைந்துவிட்டு வந்த அலுப்பில் நல்ல ஆழ்ந்த உறக்கத்தில்...

இதுமாதிரி சமயங்களில் என்ன பண்ணணும் என்று தெரிந்து வைத்திருந்தது எதுவும் நினைவில் வரவில்லை. பக்கத்திலேயே தவலையில் தண்ணீர் வழிய இருந்தும் அதை எடுத்து தீயை அணைக்கத் தோன்றவில்லை.

தீயின் நாக்குகள் ஏராளமான பசியுடன் தலைமுடி வரை பொசுக்க ஆரம்பித்தன. நெருப்புக்கு நடுவே அவள் எழுப்பிய கூக்குரலெல்லாம், நெருப்போடு சாம்பலாயின.

சுஜிதா மீண்டும் பசி உணர்வின் உந்துதலால் விழித்தவள், அம்மாவையும் பக்கத்தில் காணாமல் ''அம்மா, அம்மா... பாலு'' என்று சிணுங்கியவாறே, அம்மாவை தேடிக்கொண்டு, தூக்கக் கலக்கத்தில் நடந்து, சமையலறையில் வாசலில் எரியும் நெருப்பின் தகிக்கும் வெளிச்சத்தில் திறந்த வாய் மூடாமல் அதிர்ந்தது.

இப்போது, அம்மாவைத் தேடுவதை விட்டுவிட்டு, ஏதோ நடந்திருக்கிறது.. என்ற உணர்வு மட்டுமே, அக்குழந்தையின் உள்ளத்தை ஆக்ரமிக்க, அவசரமாய் பூஜாவை உலுக்கியது.

''அக்கா... அக்கா... அம்மா.. அம்மா... இங்க வாயேன்...'' என்னவோ, ஏதோ என்று கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்த பூஜாவைக் கைகளைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு சமையலறைக்குப் போனாள் சுஜிதா.

அய்யோ...! அதற்குள் எல்லாம் முடிந்திருந்தது. கரிக் கட்டையாய் கீழே விழுந்து கிடப்பது அம்மாதான் எனத் தெரிய பெரியவள் பூஜாவிற்கு வெகுநேரம் பிடிக்கவில்லை. அழுகை பந்தாய் அடி வயிற்றிலிருந்து கிளம்பிய நேரம் வாசலில் காலிங் பெல் வீறிட்டது.



## 11

''பூஜிதா...!'' அழைத்தவாறே உள்ளே நுழைந்த சௌக்யா நொடியில் சூழ்நிலையைத் தலைகீழாக மாற்றிவிட்டாள். ஸ்கூல் பேகை கையில் கொடுத்து சுஜிதாவை முதலில் பேக் செய்தவள், ஜெய்குமார் சுஜாவை ஸ்கூலில் விட்டுவிட்டு வருவதற்குள் பூஜிதா அருகே வந்து தலையைக் கோதி, ஒரு பெண்ணின் வாழ்வில் நடக்கக்கூடிய அத்தியாவசியமான அழகான நிகழ்வு அது என புரிய வைத்தாள்.

மெல்ல பயம் தெளிய வைத்து, ''கதவை சாத்திக் கொண்டு இரு... இதோ... வந்துவிடுகிறேன்'' என்று போனவள் திரும்பி வந்த போது, கையில் நாப்கின், அதை உபயோகப்படுத்தச் சொல்லிக் கொடுத்து, பூஜிதாவிற்கு அந்த நிமிஷம் சௌக்யா, அம்மா ஜனனியாய் தெரிந்தாள்.

ஜெய்குமார் வந்தவுடன் தனியே கூப்பிட்டுப் பேசியவள், அன்று முழுக்க பூஜிதா கூடவே இருந்தாள், மதியம் சுடச்சுட உப்புமா பண்ணிக்கொடுத்தாள். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை அவளுக்கு தேவைப்பட்ட உதவியை செய்து கற்றுக் கொடுத்தாள்.

சுஜா பள்ளியிலிருந்து வந்ததும், பூஜாவைக் கட்டிக் கொண்டது.

''அக்கா... நீ பெரிய அக்கா ஆயிட்டியா... ஐ...'' அதற்கு அதைவிட சந்தோஷமாயிருந்தது, சுடச்சுட ஸ்பூன் போட்டு தட்டில் சௌக்யா கொடுத்த கிச்சடி உப்புமா.

அதுமட்டுமல்ல... மூன்றாள் நாள் தானே வந்து, பூஜாவிற்கு தலைக்கு தண்ணீர் ஊற்றி, கையோடு

வாங்கி வந்திருந்த, பூவை தலைநிறைய வைத்துவிட்டு, உச்சி முகர்ந்தபோது, ''அம்மா...'' என்று சௌக்யாவைக் கட்டிக் கொண்டு, மடியில் படுத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

அதையும் மீறி, சௌக்யா அப்பா கூட வேலை பார்ப்பவர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக, இந்த அளவு மௌனக் கெடுவது அவள் புருவத்தை கொஞ்சம் உயர்த்தவே செய்தது.

## 12

''அப்பா... அப்பா...'' கதறிக்கொண்டே, வந்து வந்து கட்டிக் கொண்ட பூஜிதாவை விலக்கிவிட்டு, உள்ளே வந்தவனை தீயின் நெடி பதற வைத்தது.

என்னவோ, விபரீதம் என்ற உணர்வு உந்தித் தள்ள, சமையலறையில் எட்டி பார்த்தவனுக்கு அணைந்து அடங்கிய புகைக்கு நடுவே, கரிக்கட்டையாய், ஜனனியின் உடல் பார்வைக்குக் கிடைத்தது.

''அய்யோ... ஜனனி...''

ஜெய்குமாரின் அலறல், நாலா சுவர்களிலும் எதிரொலித்து அடங்கியது.

''பூஜா... சுஜா... அம்மா நம்மள விட்டுட்டுப் போயிட்டாளே...''

''ஐயோ... நானே என் ஜனனியைக் கொன்னுட்டேனே... அப்படி கோவிச்சுட்டுப் போனது, அவளைத் தற்கொலை பண்ணிக்கற அளவுக்கு கொண்டு விட்டுடுச்சே... ச்சே..



நான் பக்கத்தில் இருந்திருந்தா எப்படியாவது காப்பாத்தியிருப்பேன்'' ஜெயகுமாருக்கு தாளவில்லை.

பூஜாவையும், சுஜாவையும் கட்டிக்கொண்டு கதறினான். ''ஜனனி...! இந்தக் குழந்தைகளைப் பாரேன். இவங்களைத் தனியே தவிக்க விட்டுட்டுப் போக உனக்கு எப்படி மனசு வந்தது? கடுகு வெடிக்கும்போது, லேசா பட்டாலே துடிச்சுப் போயிடுவியே.. நீயே தீப்பத்த வைச்சுண்டு கருகியிருக்க... அந்த அளவுக்கு நீ போக நான் காரணமாயிட்டேனே...!

பூஜாவும், சுஜாவும் ''அம்மா...'' என்று கதற, ஜெய்குமார் வழிந்தோடும் கண்ணீருடனே, அவர்களை சமாதானப் படுத்த முனைந்தான்.

சற்றே தெளிந்து கேஸ் பர்னரை அணைத்து, ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தவன், ஜனனியின் அப்பா, அம்மாவிற்கு டயல் செய்தான். பால் பவுடரை கலக்கி சுஜாவிற்கு கொடுத்தவன், பீறிட்டெழும் அழுகையோடு, ஜனனியின் உடலின் காலடியில் கதற ஆரம்பித்தான்.

ஆச்சு... எல்லாம் முடிந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தாம் பூஜா சுஜாவை கவனித்துக் கொண்டனர். ஜெய்யோ, சுயநினைவு சிறிதும் இல்லாதவனாய், பெரியவர்கள் சொல்வதை உடலளவில் செய்து கொண்டிருந்தான்.

எரிந்து உடலுக்கு மற்றொருமுறை சிதையூட்டும் போதும் கூட அவன் நினைவெல்லாம் குற்ற உணர்வே நிரம்பி வழிந்தது. ''ஐயோ... நானே என் ஜனனி தற்கொலை பண்ணிக்க காரணமாயிட்டேன்... பூஜா சுஜா என்று பார்த்து பார்த்து வளர்த்தாளே? இந்த சின்னஞ்சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு தனியே என்ன செய்யப் போகிறேன்...? கொஞ்சம் பொறுமையாய் இருந்திருக்கலாம்...'' நினைவுகளே வதைக்க ஆரம்பித்தன.

மாப்பிள்ளையின் இந்த நிலை, வெறித்தபார்வை, ஸ்தம்பித்த நிலை அவனுடைய மாமனார், மாமியாரை ரொம்பவே கவலைப்பட வைத்தது.

''என்னங்க...! மாப்பிள்ளை இப்படி இருக்காரே... நமக்கு மட்டும் வருத்தம் இல்லாமலா இருக்கு... இந்த பாவிப் பொண்ணு இப்படிப் பண்ணிட்டாளே... பிள்ளைங்களை நெனைச்சாவது மாப்பிள்ளை மனசை தேத்திக்கணும். அவர வேணா நம்ம கூட வந்து கொஞ்ச நாள் இருக்கச் சொல்லுங்களேன்.''

மாமியார், மாமனாரிடம் கவலைப்பட, அவர் கேட்ட போது கூட ஜெயகுமார் மறுத்துவிட்டான்.

''நான் கோவிச்சுண்டு போனதுதான் ஜனனி தற்கொலை பண்ணிக்க காரணமாயிடுத்து... கோபம் போய் சமாதானப் படுத்த வந்து பார்த்தா அதுக்குள்ளே தன்னையே முடிச்சிட்டிருக்கா... அவ உசிரு போன இந்த வீட்டை விட்டு நான் வரமாட்டேன்'' என்று தீர்மானமாக மறுத்துவிட, பூஜா சுஜாவையாவது அனுப்பித் தருமாறு கேட்டதற்கும் மறுத்து விட்டான்.

''இல்லையில்ல... பூஜாவையும், சுஜாவையும் எப்படியெல்லாம் கொண்டு வரணும்னு அவ ஆசைப்பட்டாளோ, அது மாதிரி கொண்டு வர வேண்டியது என் கடமை. ச்சே...! குழந்தைகளைப் பற்றி என்னவெல்லாம் கனவு வைத்திருந்தாள்... அதை நான் நிறைவேற்றினால் தான் அவள் ஆத்மா சாந்தியடையும்...'' என்றவனிடம் மேற்கொண்டு பேச வாயின்றி, காரியம் முடிந்து சில நாட்களில் அவர்களும் கிளம்பினார்கள்.

இரண்டு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு ஜெய்யின் கண் முன் எதிர்காலம் கேள்விக் குறியாய் விரிந்தது.



## 13

**வா**னம் இருட்டிக் கொண்டு வரும்போதே, பெரியவள் பூஜிதா சொல்லியிருந்தாள். ஆனாலும்; சின்னவள் சுஜிதா கேட்காமல் அடம் பிடிக்கவும் சற்று தள்ளியிருந்த பார்க்குக்கு விளையாட வந்திருந்தனர்.

திடீரென்று, சொல்லாமல் கொள்ளாமல் சட சடவென மழை. இருவரும் ஏறக்குறைய நனைந்து விட்டிருந்தனர். பூங்காவில் பெரியவர்கள் அமர இரண்டு மூன்று பென்ச்சுகள் உண்டு. அதற்கு நிழற் கூரையும் உண்டு.

ஆனாலும், எத்தனைப் பேரைத்தான் அது கொள்ளும்! சற்றே மழையின் வேகம் குறைந்தாலும், திசை மாறி வீசும் காற்றினால், சாரலும் காற்றுமாக, கண்களை மறைத்தது.

சுஜிதாவிற்கு தான் திடீரென அந்த ஐடியா... ''பூஜா... நாம வேணா, பக்கத்தில தான சௌக்யா ஆன்ட்டி வீடு...! அங்க போயிடலாம். அங்கேயிருந்து போன் செய்தால் டாடி வந்து அழைச்சிட்டுப் போவாரில்ல...''

''ஆமாண்டி...! அதுவும் சரின்னு படுது...'' இருவருமாக மழை தூறிக்கொண்டிருக்கும் போதே, நனைந்தவாறே பக்கத்து தெருவில் இருக்கும் சௌக்யா வீட்டிற்கு வந்தனர்.

''ஹாய்... குட்டீஸ்...!''

''என்ன இப்படி நனைஞ்சிண்டு இந்த நேரத்துல இங்க...''

''பார்க்குக்கு வந்திருந்தோம்... ஆன்ட்டி...! நல்லா மழை பிடிச்சிருச்சு...''

''அட்டா.. இந்தாங்க டவல்... துடைச்சுக்குங்க... உங்களுக்கு ஸுட் ஆகிற மாதிரி... ஆங்... சுஜி... இந்தா. ஆன்ட்டியோட சுடிதார் ஸ்லிப்... உனக்கு சிம்மி மாதிரியே அழகா ஸுட் ஆகுதே...'' என்றவள்... பூஜிதாவிற்கு தன் சின்னதாய் போன சுடிதாரைப் போடச் செய்தாள்... தொள தொளவென்று இருந்தாலும், அந்தக் கரிசனம் மனதைத் தொட்டது.

ஆன்ட்டி தந்த டீயைப் பருகியவாறே... நினைவிற்கு வந்தவள் போல பூஜிதா... ''ஆன்ட்டி...! டாடிக்கு போன் செய்து சொல்லணும். போன் செஞ்சுக்கவா...''

''அட்டா... ஆன்ட்டியோட, செல்லுல, கார்டு இன்னும் போடலியே.. அதுல பண்ண முடியாதே...'' என்றவள்.

''நீங்க வீட்டைத் தாள் போட்டுண்டு உள்ளே இருங்க... மழை கொஞ்சம் விட்டிருக்கு. நான் குடை எடுத்துண்டு பக்கத்துல உள்ள பூத்துக்கு போய் பண்ணி சொல்லிடறேன். நான் வீட்டை க்ளீன் பண்ணிட்டிருந்தேன்னா அதான், சுஜிக்குட்டி. அந்த புக்ஸ், டைரியெல்லாம் இந்த சேர் மேல வைச்சிட்டு அங்க உக்காந்துக்கோ.''

சௌக்யா சொல்லிவிட்டுச் செல்ல, சுஜா, அவள் சொன்ன மாதிரி நாலைஞ்சு டைரிகளையும், புத்தகங்களையும் எடுத்து வைக்க முற்பட்டபோது அதிலிருந்து ஒரு போட்டோ கீழே விழ பூஜா அதை பழையபடி வைக்க எடுத்தவள் நிமிர்ந்தாள். அது அவள் டாடியின் போட்டோ.

## 14

மற்றவர்களின் டைரியைப் படிக்கக்கூடாது நாகரீகமில்லை என்பதை எல்லாம் அறிந்திருக்கக் கூடிய வய



தில்லை என்பதால், பூஜாவிற்கு, அந்த டைரியை எடுத்ததோ ஆர்வ மிகுதியால், அதைப் படித்ததோ தப்பாகத் தெரியவில்லை.

**''கண்ணே...**
**உன்னை**
**கண்ட நாள் முதல்,**
**கண்கள்**
**இல்லை**
**என் வசம்...**

என்று ஆரம்பித்து, ''சௌக்யா... உன்னில் நான் சௌக்கியமா...?''

என்று முடித்து உன் ஜெய் என்று அடிக் கையெழுத்து, அவள் அப்பாவின் கையெழுத்து வாழ்த்து மடல் உள்ளே.

நாலைந்து பக்கங்கள் தான் புரட்டியிருப்பாள்... ''ஜெய்... ஜெய்...'' என்று.

எண்ண முடியாத தடவைகள் அவன் பெயர் 'ஜெய் பார்த்தது. அவள் ஒற்றை ரோஜாவை வர்ணித்தது. அவன் போட்டு வந்திருந்த பிங்க் ஸ்ரைப்பிஸ் சட்டை அவனுக்கு அழகாக இருந்தது' என்று, காதலைக் கொட்டியிருந்தாள், சௌக்யா டைரியில்.

ஒரு கணம் பூஜாவிற்கு எல்லாம் புரிந்தது போலிருந்தாலும், எதுவுமே புரியாதது போலவும் இருந்தது.

இவ்வளவு விரும்பியிருந்த சௌக்யா, ஏன் டாடியை திருமணம் செய்து கொள்ளவில்லை...? அப்போது அவ்வளவு விரும்பியிருந்த ஆன்ட்டி, அப்பாவால் இப்போது எப்படி ஒன்றுமே நடவாதது போலிருக்க முடிகிறது.

சுஜா, டி.வி. போட்டு பார்த்துக் கொண்டிருந்தாள் பூஜாவிற்கு இன்னமும் பக்கத்து வீட்டுப் பாட்டி கூறியதை

போல, சௌக்யாவை அப்பாவை மயக்க வந்த மாதிரியோ, அல்லது அப்பாவைக் கல்யாணம் செய்துகொள்ள விழையும், அதுக்காகவே பழகும் கீழ்த்தர எண்ணமுடையவளாகவோ, கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஐந்தாறு பக்கங்கள் படித்திருப்பாள், தடக்கென்று கதவு திறக்கப்பட, நெற்றியில் வழிந்த தண்ணீரைத் துடைத்த வாறே வந்தாள் சௌக்யா.

''டாடிக்கு போன் பண்ணி சொல்லிட்டேன். வந்துடுவாரு... சூடா ஏதாவது பண்ணித்தரேன். சாப்பிட்டிட்டு...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவளுக்கு பூஜா கைகளில் டைரியைப் பார்த்ததும் சகலமும் புரிந்துபோனது.

வார்த்தைகள் பாதியிலேயே நிற்க, கனத்த அமைதி அறையை நிறைத்தது.

## 15

அந்த அமைதியை சட்டென கலைத்தது, சௌக்யாவே தான். தானாக எதையாவது நினைத்துக் கொண்டு, அறைகுறையாக புரிந்து கொண்டு விடக்கூடாதே என்ற பதைபதைப்பும், தன் நிலையை விளக்கிக் கூற வேண்டிய அவசரமும் பேச்சில் இருப்பதாகத் தோன்றியது.

பூஜா ஓரளவு விபரம் தெரிந்தவள். இந்தக் காலத்து பிள்ளைகள் தாம் டி.வி. பார்த்து வேண்டாததையும், அவசியமில்லாததையும் கப்பென்று பிடித்துக் கொள்கின்றனவே....

''பூஜா! நீ நினைக்கிற மாதிரி இல்ல....'' கேட்காமலேயே தன்னிலை விளக்கம் கொடுத்து ஆரம்பித்தவள் தொடர்ந்தாள்.



''அது உன் டாடி தான்... ஆனா இப்ப உள்ளவர் இல்லை. உன் அம்மாவை கல்யாணம் செய்துக்கறதுக்கு முன்னாடி, என்னைக் காதலிச்ச ஜெய்... இந்த நினைவுகள் தாம் என்னை இன்னமும் சுவாசிக்க வைத்திருக்கு...''

ஆழ்ந்து பெருமூச்சு விட்டவள் அந்தக் காலத்து நினைவுகளை நினைவு கூர்ந்தாள்.

என் அப்பா, ரொம்பவும் கண்டிப்புக்கு பேர் போனவர். அவருடைய தங்கை, அதாவது என் அத்தை ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கறதால, எனக்கு, ஒரே பொண்ணாயிருந்தும் ஏகப்பட்ட கெடுபிடி. இங்க நிக்காத, அங்க பாக்கதேன்னு. அப்படி ஒரு சூழ்நிலைல தான் நான் ஜெய்யை சந்திச்சேன்.

ஆரம்பத்தில் அவருக்கும் எனக்கும் ஒண்ணுமேயில்லை. சொல்லப்போனா நட்பு கூட பெரிசா ஒண்ணுமில்ல. ஒருநாள் என் பிரெண்ட் வீட்டுக்கு போயிட்டு வர வழில, தனியா பஸ் ஸ்டாப்புல மாட்டிக்கிட்டேன். நல்ல மழை. குடையும் இல்ல. சாரல் வெகுவாக அடிக்க, கட்டியிருந்த புடவை முழுவதுமாய் நனைய, அப்போது தான் பார்த்தேன். எனக்கு பக்கத்தில் குடையும் இல்லாமல் என்னைப் போலவே அவஸ்தைப் பட்டுக்கொண்டு கையில் வைத்திருந்த பையால் சாரலைக் கட்டுப்படுத்தப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

ஒரே ஒரு ஆட்டோ, அந்த வழியே காலியாகப் போனது. இரண்டு பேர் நிற்கிறார்களே, ஏதாவது சவாரி கிடைக்குமா.. பேருந்து நிறுத்தத்தின் பக்கம் ஆட்டோவின் வேகம் குறைய அதைப் பார்த்த அவர்,

''ஆட்டோ, ஆட்டோ'' என்று கத்திக் கொண்டே என்னிடம் கூறினார்.

‘‘சீக்கிரம் வாங்க... உங்க வீட்டுப்பக்கம் தான் நானும் போறேன். ஒண்ணா போயிடலாம். மழை ஜாஸ்தியாகுமே தவிர குறையற மாதிரி தெரியல. வாங்க போயிடலாம்.’’

நானும், நிலைமையின் தீவிரம் உணர்ந்து, யோசிக்காமல் ஏறிக்கொள்ள ஆட்டோ, மழையைக் கிழித்துக் கொண்டு விரைந்தது.

எனக்கு ‘அவர் உங்கள் வீட்டைத்தாண்டி போகணும்.. என்றாரே நமக்கு அறிமுகமான மாதிரியும் இல்லையே.. நம்மை எப்படி தெரிந்து வைத்திருக்கிறார்’ என்றெல்லாம் யோசிக்கத் தோன்றவில்லை.

வாசலில் ஆட்டோ நிற்க, மழையில் நனைந்தவாறே இறங்கி உள்ளே நுழைய முயன்ற என்னை, கர்ஜிக்கும் குரலில் வரவேற்றது என் அப்பா.

## 16

‘‘எவ்வளவு தைரியம் இருந்தால் நீ அவனோட, ஒரே ஆட்டோல, இப்படி நனைஞ்ச புடவையோட வந்து நிப்ப...’’ ஆத்திரத்துடன் கர்ஜித்தது அப்பாவின் குரல்.

‘‘அவனோடவா...? எவனோட.... ஒருவேளை முன்பின் தெரியாத யாரோ ஒருவனோடு வந்து இறங்கியது அப்பாவைக் கோபப்படுத்தி விட்டதா... அப்படி இருந்தாலும் கூட, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு வந்திருக்கிறாளே என்று, கவலைப்படாமல், என்ன ஆயிற்றோ... என்று பதறாமல் எப்படி இவரால் கோபப்பட முடிகிறது...’

‘‘அப்பா.. என்ன இது? வாசலிலேயே நிக்க வைத்துக் கொண்டு.. என்னை உள்ளே போக விடுங்கள். அவர் யாரென்றே எனக்குத் தெரியாது.. இதே தெரு தானே



மேலும் ஆட்டோ ஒன்றுகூட அந்தப் பக்கம் வரவில்லை. எவ்வளவு நேரம்தான் இருட்டில், மழையில் தனியாக இருப்பது என்றுதாம்பா அவருடன் வந்துவிட்டேன்’’ என்று கூறியவாறே உள்ளே சென்று விட்டேன்.

பிறகு தான் அம்மா சொல்லித் தெரிந்தது. அவர் என் அத்தை காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்டவரின் தம்பி பையன் என்பது. தம்பி பேமிலி கிராமத்தில் இருக்க, இவர் அதே தெருவில் ரூம் எடுத்துத் தங்கி உள்ளார். என் அப்பாவின் சந்தேகத்திற்கு ஏற்ற வகையில், அவரின் சந்தேகத்தை அதிகப்படுத்தும் விதத்தில், யதேச்சையாக ஒரு நாள் அவருடன் பேசிக் கொண்டிருந்ததை அப்பா பார்த்து, கோலம் போட்டுக் கொண்டிருக்கும் போது, வாங்கிங் போகும் அவர் சாதாரணமாக பேசிவிட்டுச் சென்றது எல்லாம் ‘‘மஞ்சள் காமாலைக் கண்ணுக்கு எல்லாம் மஞ்சளாகத் தெரிவதைப் போல எல்லாம் தப்பாகவே தெரிந்தது.’’

பிறகுதான் அம்மா மூலம் தெரிந்தது! அத்தை காதலித்தது வேற்று மதத்தவரையோ, அல்லது வேற்று ஜாதிக் காரனையோ அல்ல... ஒரே ஜாதியாக இருந்தாலும், காதலித்து தானாகவே தேர்ந்தெடுத்து இவரைத் தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்றதைத் தான் அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

அதுவரை ‘‘சொர்ணம்’’ ‘‘சொர்ணம்’’ என்று தங்கை மேல் உயிரையே வைத்திருந்தவர். ஒரே நாளில் தலை கீழாக மாறிப்போய் தங்கை விதவையானாலும், பரவா யில்லை என்று பாலனை வெட்டிட அருவாளைத் தூக்கிக் கொண்டு கிளம்பினார். ‘‘அளவு கடந்த பாசம் ஒரு நொ யில் அளவுகடந்த துவேஷமானதை அன்று தான் எ கண்ணால் பார்த்தேன்,’ என்றாள் அம்மா.

''சரிம்மா... அதுக்கென்ன இப்போ... நானென்ன அவரைக் காதலிக்கவா செய்றேன். அன்னிக்கு வேற வழியில்லாத சந்தர்ப்பத்துல அவரோட ஒண்ணா ஆட்டோல வந்திறங்க வேண்டியாயிற்று. ஏதோ ஒண்ணு இரண்டு சந்தர்ப்பங்கள், அவர் பேச பதில் பேச வேண்டியதாச்சு... அவர் இதப்பத்தி பேசட்டும் நல்லா பதில் கொடுக்கிறேன்.'' ஏதும் கேட்கவில்லை. அவராகவே ஒரு முடிவிற்கு வந்தவர் போல, வரன் தேட ஆரம்பித்தார். சௌக்யாவிற்கு அழகு, நல்ல வரதட்சணை, கொடுக்கக்கூடிய வசதி என்றிருந்தாலும் கூட, உடனடியாக கல்யாணம் நடத்தணும் என்கிற எண்ணத்துடன் தேடியதால் வந்த வரனெல்லாம் சொட்டை சோடையாக இருந்தன.

தன்னைவிட குறைவாகப் படித்த கவர்ன்மென்ட் உத்தியோகத்தில் பத்து வருடம் குப்பைக் கொட்டி 31 வயதான பாலனை வரனாகக் கொண்டு வந்து நிறுத்திய போது தான் சௌக்யாவிற்கு தாங்கவில்லை.

'ச்சே... என்ன மனுஷர் இவர்' இருந்திருந்தால் எனக்கு 21 முடியப்போகிறது. பத்து வயது வித்தியாசத்தில் கல்யாணம் ஆனால்... அவளால் அம்மாவிடம் பொருமத்தான் முடிந்தது. ஆனால் அம்மா, சூடாமணி எடுத்த முடிவோ...

## 17

"அம்மா என்ன சொல்ற நீ.. உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. நான் ஜெய்குமாரை கல்யாணம் பண்ணிக்கிறதா... என்ன சொல்ற நீ...''

''நடக்கப் போறதைத் தாண்டி சொல்றேன். உனக்கு தெரியாத பல விஷயங்கள், நான் சொல்லியே ஆக



வேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கு... முன்னாடி கல்யாணத்துக்கு முன்னாடி பத்திரிக்கையில் எல்லாம் மனைவியை சந்தேகப்படும் கணவர்களை பற்றின செய்திகளைப் படிக்கும் போதெல்லாம் நான் நம்பினதில்ல.

இப்படியும் கூட இருப்பாங்களா? மிகைப்படுத்தப்பட்டிருக்கேன்னே நினைப்பேன். ஆனா, உங்க அப்பாவைக் கல்யாணம் பண்ணிண்ட பிறகு தான் தெரிந்தது. அப்படிப்பட்ட கணவர்களும் இருக்கிறார்கள். அதையும் விட மோசமாக உன் அப்பா போன்ற சைக்கோ சந்தேகப் பேர்வழிகளும் இருக்கிறார்கள் என்று!

'இயல்பிலேயே நல்லவர் தான் உன் அப்பா. ஆனால் பாசமுடன் வளர்த்த அவர் தங்கை செய்த நம்பிக்கை துரோகத்தை தான் அவர் மனது ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் நிலையிலிருந்து பார்த்தால் அவர் உள்ளத்தின் பதைப்பு நியாயமாகத்தான் தெரியும். தன் தங்கைக்கு ஒன்றுமே பார்த்து வாங்கத் தெரியாது என்று, சின்ன வயதிலிருந்தே ஹேர்பின் முதல் புடவை வரை பார்த்து பார்த்து தேர்ந்தெடுத்துக் கொடுத்தவருக்கு தன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை விடாமல், தானாகவே இவன்தான் உன் மாப்பிள்ளை என்றால் எப்படி இருந்திருக்கும்?'

அவரால் அந்த ஏமாற்றத்தை, ஆமாம்... அவர் தன் தங்கை தன்னை ஏமாற்றிவிட்டதாகத் தான் உணர்ந்தார். அம்மா, தன் பதினைஞ்சு வயதிலேயே செத்துப் போய் விட, அப்போது உன் அத்தைக்கு ஏழு வயதுதான் இருக்கும். அப்போதிருந்தே, துணையாக இருந்து ஆதரவு தந்த மாமா வீட்டிலிருந்து,

பட்டப்படிப்பு முடித்தவுடன் வேலையைத் தேடிக் கொண்டு, தங்கையுடன் வெளியே வந்தவர் உன் அப்பா.

அந்த ஏமாற்றம் அவருடைய நெஞ்சில் ஆழப் பதிந்து, பெண்களைப் பற்றி ஒரு தப்பான அபிப்ராயத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

அவருடைய இந்த சந்தேக புத்தியின் விளைவு என்னோடு போகட்டும். பெத்த பெண் யாரையும் காத லிக்கவில்லையென்று சத்தியம் செய்தாலும் நம்பாத மனுஷன் என்ன மனுஷன்...?

''எனக்குத் தெரிந்த வரையில், அந்தப் பையன் ஜெய் குமார் நல்ல பையன். நல்ல உத்யோகம். நம்ம ஜாதிதான். நீ, அவனையே கல்யாணம் பண்ணிக்கற!''

''என்ன அம்மாவும், பொண்ணும் சமையல் பாக்கறீங் களா அல்லது கதை பேசிட்டிருக்கீங்களா'' என்றவாறே உள்ளே நுழைந்த கிருஷ்ணன். ''சூடாமணி உன் பொண் ணுக்கு கொஞ்சமாவது சமைக்கச் சொல்லிக் கொடு... கடலைப்பருப்பு எது.. துவரம் புருப்பு எதுன்னு கத்துக்கொடு. நான் என்னடான்னா, நாம் பார்த்திருக்கமே பாலன் அவங்க வீட்ல, சௌக்யா நல்லா சமைப்பான்னு சொல்லி வைச்சிருக்கிறேன்.''

பதிலை எதிர்பார்க்காத விளக்கம். பேச்சுவாக்கில் ''சௌக்யா காதில் விழும்படி, பாலன் தான் மாப்பிள்ளை. நீ கண்ட கனவுக் கோட்டை கட்டிக் கொண்டிருக்காதே'' என்று காதில் போட்டாகி விடும் தந்திரம்.

## 18

ஜெய்குமாரை ஒருமுறை சந்தித்துப் பேசும்போதுதான் அவருடைய நல்ல மனசு புரிந்தது. அம்மா சொன்னது நிஜம். உண்மையிலேயே ஜெய் ஒரு ஜெம்.



''எல்லாம் எனக்குத் தெரியும். ஏதோ ஒன்றிரண்டு தடவை வழியில் பேச நேர்ந்ததற்கே உங்கள் அப்பா உங்களிடம் நடந்துகொண்ட விதம் வருத்தமாக இருந்தது. எல்லாம் என்னால் தானே.''

''என்னால்தானே உங்கள் அப்பா உங்களை சந்தேகப் படுகிறார்.'' என்று அவன் மறுகவும், பொறுக்கமாட்டாமல்,

''நீங்கள் என்ன செய்வீர்கள், என் அப்பாவின் சந்தேக குணத்திற்கு, தாங்கள் எப்படிப் பொறுப்பாவீர்கள் என வருத்தப்பட்டதோடு, அவன் பெரியம்மா தான், தன் அத்தை என்ற அந்தக் கதையையும் கூறினாள்.''

சிறிது நேரம் பேசிவிட்டுப் போனதுமே, மனதுக்குள் ஏதோ இனம்புரியாத நெகிழ்ச்சி.

அம்மா சொன்னது சரிதான். நல்லவிதமாகத் தெரிகிறார். தன்னை அறியாமல் தான் நேசிக்கும் ஒருவரைப் பற்றி, நல்லவிதமான எண்ணம் தோன்றும்போது மனதுதான் எத்தனை மகிழ்ச்சி அடைகிறது. சில நாள் பழக்கம் காதலில் கொண்டுவிட்டது. எல்லா அம்மாக்களைப் போல சூடாமணியும் அவளைக் கட்டுப்படுத்தாததோ, அப்பாக்கு தெரிஞ்சா என்னவாகும் என்று நீலிக்கண்ணீர் விடாததோ ஆச்சரியமாய் இருந்தது.

அவளும் பாவம். அப்பா மீது அவ்வளவு வெறுப்பு. அதிலும் சாதாரணமாக ஜெய்குமார் நின்று இரண்டு வார்த்தை பேசியதற்கே, என்ன ஏதென்று விசாரிக்காமல், தானாகவே சந்தேகப்பட்டு சிறிதும் பொருத்தமில்லாத ஒருவனை மாப்பிள்ளை என கொண்டு வந்து நிறுத்தியது, அம்மாவை மேலும் ரணப்படுத்தியிருந்தது.

கல்யாணத்திற்கு நாட்கள் நெருங்க, நெருங்க சௌக்யா விற்கும், ஜெய்குமாருக்கும் இடையிலும் நெருக்கமான அன்பு உண்டாயிற்று. கல்யாணத்திற்கு 4 நாட்கள் முன்பு

இருவரும் தனித்துப் பேசி கொண்டிருந்த போது கூட ஜெய் கூறினான்.

''கவலைப்படாதே, சௌக்கியா உனக்கு நான், எனக்கு நீ. நமக்கு நாம் இரண்டு பேரும்தான். என் வீட்டைப் பொருத்த வரைக்கும் ஒரு கவலையுமில்லை. உன் அத்தை அதாவது என் பெரியம்மா தன்னோட அன்பால புகுந்த வீட்டைத் தன் வீடா நினைச்சது மட்டுமில்லாம, எல்லார் மனசிலயும் இடம் பிடிச்சிருக்காங்க.

''அதனால் எங்க அப்பா, அம்மாக்கு அவங்க மேல ஒரு நல்ல அபிப்ராயம் இருக்கு. அதனால், உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கறதுல எந்தத் தடையும் இருக்காது. நீ மட்டும் சரின்னு சொல்லு. வியாழக்கிழமை கல்யாணம் இல்லையா, அன்னிக்கு காலைல, ஒன்பது பத்தரை முகூர்த்தம். நான் காலைல ஐந்து மணிக்கெல்லாம் வந்து கல்யாண மண்டபத்தில் தெரு முனைல வெயிட் பண்றேன். உனக்கு சிக்னல் கொடுக்கறேன். நீ கிளம்பி வா. அதே முகூர்த்தத்துல நம் கல்யாணம்'' அவன் சொல்ல கனவு போலிருந்தது.

அப்பா, அப்பா என்று உயிரையே வைத்திருந்த தானா இப்படி தன் கல்யாணத்தை பற்றி தானாக முடிவு செய்து கொண்டிருக்கிறோம் என்று வியப்பாக இருந்தது.

விருப்பிற்கும், வெறுப்பிற்கும் இடையே ஒரு நூலிழை தான். ஒரேயடியான அபிமானம், ஒரே நொடியில் வெறுப்பாக மாறிவிட முடியும் என உணர முடிந்தது.

இதே மாதிரியான ஒரு மனநிலை அப்பாவுக்கும் அத்தை விஷயத்தில் இருந்திருக்குமோ எனத் தோன்றியது.

''எப்படியோ என் மாமனாருக்கு தேங்ஸ் சொல்லிடு.'' என்ற ஜெய்யை புரியாமல் பார்த்தாள்.



''அவர்தானே நமக்குள் ஒண்ணுமே இல்லாதபோது, அதைக் காதல் என்று சந்தேகப்பட்டு உண்மையாக்கியவர்'' என்றான்.

## 19

திருமணத்திற்கு முந்தைய தினம் நிச்சயதார்த்தம். சௌக்யாவிற்கு தனக்கு பக்கத்தில் மணமகனாக நிற்கும் பாலனைப் பார்க்க பார்க்க எரிச்சலாக வந்தது. அப்பா அவசர அவசரமாக தேடி வந்த வரன். சௌக்யாவோ சுண்டினால், ரத்தம் வரும் நிறம். நல்ல உயரம் அளவான பருமன். பாலனோ மாநிறத்திற்கும் சற்று குறைந்த நிறம். பூசின உடல்வாகு. தான் 'கழுத்தை நீட்டு' என்றால் நீட்டும் அளவிற்கு பெண்ணை வளர்த்து விட்டிருப்பதில் தலை கொள்ளாத பெருமையுடன் வளைய வந்துக் கொண்டிருந்தார், அப்பா.

அவரை நினைக்கையில், பாவமாயிருந்தது. அந்தப் பெருமை எல்லாம் சில மணி நேரங்களே. நாளை நானும் ஜெய்யும் கல்யாணம் முடிந்து வரும்போது எப்படி எதிர்கொள்ளப் போகிறாரோ? தன் மகன் மேல் நம்பிக்கை இல்லாத தகப்பன்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கப் போகிறது. இவராகவே ஏதாவது நினைத்துக்கொண்டு, அதை உண்மை என்று எண்ணி ஒரு மாப்பிள்ளையை கொண்டு வந்து நிறுத்தி, கழுத்தை நீட்டு என்று பணயம் வைக்கிறாரே, அதற்கு அவள் வாழ்க்கை ஒன்றும் களிமண் பொம்மையல்ல, பிசைந்து மீண்டும் செய்வதற்கு....

உடலளவில் பாலனுக்குப் பக்கத்தில், நின்றிருந்தவளுக்கு மணமெல்லாம் ஒரே சிந்தனையில் விழுந்தது.

ஆரஞ்சில் கிளிப்பச்சை நிற பார்டர் போட்ட அபூர்வா பட்டுப்புடவை கட்டிய பெண்தான், பாலனின் அம்மா. அவளுக்கு பாதிநேரம் அவள் உறவினர்களை சௌக்யா விற்கு அறிமுகப்படுத்துவதிலேயே போனது. அவளுக்கு நிரம்பவும் பெருமை இருக்காதா பின்னே. சௌக்யா போல அழகும், படிப்பும் நிறைந்த பெண் அவளுக்கு மருமக ளாக வருவாள் என அவள் கனவிலும் நினைத்திருப்பாளா... எல்லாம் என் நேரம் நினைத்துக் கொண்டாள், சௌக்யா.

இரவு முழுக்க தூக்கமே இல்லை. அம்மாவிடம் ஜெய் கூறியதை அப்படியே கூறியிருந்தாள். அம்மாவோ, ''நீ எங்கே இருந்தாலும், நல்லா இருக்கணும்'' என்றதோடு நிறுத்திக் கொண்டாள். கணவனுக்குத் தெரியாமல் மகள் ஓடிப்போக அனுமதி அளித்திட்ட முதல் தாய் அவளாகத் தான் இருக்க வேண்டும்.

அம்மாவின் ஆசீர்வாதம் பூரணமாக உண்டெனத் தெரியும். காலை, தான் மண்டபத்தில் இல்லையென்று தெரிந்தால், அப்பா, அம்மாவை என்ன பாடுபடுத்து வாரோ? நினைக்கவே, நெஞ்சம் பயந்தது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்திற்காக காத் திருந்த அந்தப் பொன்னான வியாழனும் விடிந்தது.

## 20

கெட்டிமேளம் முழங்கிக் கொண்டிருக்க, பட்டுப் புடவைகள் சரசரக்க, கல்யாண மண்டபம் களை கட்டத் துவங்கியது. காலை விடியத் தொடங்க இன்னும் அரைமணி நேரம் இருந்தது. மணி நாலரை. சௌக்யாவிற்கு இமை களில் சிறிதும் தூக்கமில்லை. மனதெல்லாம் ஜெய் சொன்ன வார்த்தைகளிலேயே இருந்தது.



மணி நான்கே முக்கால், பின் ஐந்து. அதற்குள் ஜெய் குமாரிடமிருந்து செய்தி வந்துவிடும். போவதா, வேண் டாமா... மனது பட்டிமன்றம் போட்டது.

இதுவரை அப்பா நன்கு திண்டாடட்டும். பெற்ற மகள் மீது நம்பிக்கை இல்லாமல் போனதே.. என்றெல்லாம் புழுங்கியவளுக்கு, இப்போது, மண்டபத்திற்குள் நிறைந் திருக்கும் சொந்தக்காரர்களின் கூட்டம், நிறையப் போகும் கூட்டம், இவை மனதில் கிலியை உண்டுபண்ணின.

ஆனாலும், தனக்கு கொஞ்சமும் பொருத்தமில்லாத பாலனோடு ஒரு வாழ்வை அவளால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. தன் மனம் புரிந்து அப்பா ஜெய்குமாருக்கு கட்டிக் கொடுக்க முன் வந்திருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்...? இன்னும் சில மணி நேரங்களில் ஜெய்யை மணமுடிக்க முடியுமானால் நினைக்கும் போதே, உள்ளத்தில் இன்ப ஊற்று பிரவாகமாய் ஓடியது.

''சௌக்யா என்ன ராத்திரி நல்லாத் தூங்கினியா.. சீக்கிரம் எழுந்து குளித்துத் தயாராகு... எங்கே உன் அம்மா...'' என்றவாறே வந்தவர் ''என்னம்மா... என்ன ஒரு மாதிரி பாக்கற'' என்றார்.

''ஒண்ணுமில்லப்பா'' என்றாலும், ஏனோ, அவரை கண் நிறைய பார்க்க வேண்டும் போல் தோன்றியது. நேர ஆக, ஆக, இனம்புரியாத பயமா, கலக்கமா, தவிப்ப புரியாத ஒன்று ஆக்ரமித்தது.

மணி ஐந்தானது. சௌக்யாவின் சகல புலன்கள விழிப்படைந்தன. எந்த நேரமும், ஜெய்குமாரிடமிரு தகவல் வரலாம். கடவுளே.. அந்த சமயம் இந்த ரூ யாரும் இல்லாதிருக்க வேண்டுமே. தனக்கு அலங்க பண்ணும் பெண் ஆறரைக்கு வந்துவிடுவாள். அதற்

மணி ஐந்தரையானது, காபி குடித்து, பாலனின் அக்கா மாமியார் என்று ஒரு பெண்மணி வந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனபின் மணி பார்க்க, அஜந்தா குவார்ட்ஸ் மணி ஆறு என்றது.

மணி ஏழானது, எட்டானது. ஜெய்யிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. தாங்கள் முடிவு செய்ததை மோப்பம் பிடித்து, அதைத் தடுக்க தந்தை ஏதாவது செய்திருப்பாரோ என்றால், அவர் முகத்திலிருந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அம்மா எட்டிப்பார்த்து அடிக்குரலில், என்னடி என்றாள். மேற்கொண்டு பேசுவதற்குள் யாரோ வந்துவிட பேச்சு அதோடு நின்று போனது.

சௌக்யா அலங்காரம் முடிந்து மணமேடை வரை வந்தாயிற்று. பயம் கலக்கமாக மாற, பக்கத்தில் வாய்வரை நீளும் புன்னகையுடன் அமர்ந்திருந்த பாலனைப் பார்க்கவே மனம் உறுத்தியது. அவன் வேறு, சமயம் கிடைக்கும் போதெல்லாம் சௌக்யாவைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தான்.

திருமாங்கல்யம் வைக்கப்பட்டு தட்டு அனைவராலும் ஆசிர்வதிக்கப்பட்டு கெட்டிமேளம் முழங்க, சௌக்யா தன் விதியை எண்ணி நோக ஆரம்பித்தாள். வாட்சை பார்த்தவாறே புரோகிதர், சொன்ன மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே, நல்லநேரம் முடிவதற்குள் பாலன் சௌக்யா கழுத்தில் தாலி கட்டும் நிமிடம் வரை சௌக்யா எதிர் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவள் எதிர்பார்த்த ஜெய்குமார் வரவேயில்லை. கடைசிவரை.



# 21

சௌக்யாவிற்கு வாக்கு கொடுத்தபடி லஷ்மி கல்யாண மண்டபத்தை நாலரை மணிக்காவது அடைந்துவிட வேண்டும் என பைக்கில் பறந்து கொண்டிருந்தனர் ஜெயகுமாரும், அவன் நண்பன் கோகுலும். கோகுல் ஓட்ட, பின்னால் ஜெய்குமாரை சுமந்து கொண்டு பைக் காற்றை கிழித்துக் கொண்டு சீறிக்கொண்டிருந்தது. குளிர்காற்று முகத்தில் அறைய, சிலிம்பின தலை முடியைக் கோதியவாறே கேட்டான் ஜெயக்குமார்.

''என்னடா, கோயில்ல எல்லாம் ரெடியா இருக்கும் இல்லை.''

''அந்தக் கவலையே உனக்கு வேண்டாம்... அர்ச்சகர் முதற்கொண்டு எல்லாம் தயார் நிலையில் இருக்கும். நீ பைக்ல, ஸிஸ்டரை கூப்பிட்டுண்டு ஆறரைக்கெல்லாம் போயிடலாம். நான் கல்யாண மண்டபத்திலேயே நிலவரத்தை நோட்டம் பாத்துட்டு இருக்கேன். நீ முகூர்த்தம் முடிந்ததும் போன் பண்ணு.''

கோகுல் கூறிக் கொண்டே, திருப்பத்தில் திரும்ப, சந்துக்குள் இருந்து மெயின்ரோடிற்கு திரும்பிய லாரிக்காரனுக்கு என்னதான் அவசரமோ, கடைசி நிமிடத்தில் பைக்கைக் கண்டு, ப்ரேக்கை பிடிக்க முயல, வந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத லாரி, ப்ரேக் அப்ளை பண்ணியும் கட்டுப்படாமல், பைக்கோடு, கோகுலையும், ஜெய்குமாரையும் தூக்கி அடித்துவிட்டுத்தான் நின்றது. லாரியில் திருட்டு மணல் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருப்பதாலும், நிறுத்தி என்ன ஏதென்று பார்ப்பதற்குள் கூட்டம் சேர்ந்து விட்டால, தங்களின் கதி

என்னாவது என்றும், அவசர அவசரமாய் கலந்தாலோ சித்து டிரைவரும், க்ளீனரும் நிறுத்தாமலே போவதென்று முடிவு செய்தனர்.

"அதோ பாருங்கண்ணே. ஏதோ ஹெட்லைட் வெளிச்சம் தெரியுது. கார் போலிருக்கு. எப்படியும் அவங்க நிறுத்திப் பார்த்துப்பாங்கண்ணே. நீங்க கொஞ்சம் வண்டிய வேகமா எடுங்கண்ணே'' - டிரைவருக்கும் அப்போது கிளீனரின் பேச்சே சரியென்று பட்டது.

காரிலிருந்து இறங்கிய அந்த தம்பதி என்ன ஏதென்று பார்த்து, அவர்களைக் காரில் தூக்கிப்போட்டுக்கொண்டு பக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர். சில நிமிடங்களிலேயே, வெளியே வந்த டாக்டர், "இருவரில் ஒருவர் ஸ்பாட்டிலேயே போய்விட்டார். இன்னொருவர் கோமாவிற்கு போய்விட்டார். தலையில் பலமாக அடிபட்டுள்ளதால், நினைவு எப்பவும் திரும்பலாம். மாதக்கணக்கிலும் ஆகலாம். இவர்கள் யாரென்று தெரியணுமே பர்ஸில் அட்ரஸ் ஏதாவது இருக்கிறதா?''

"பர்ஸை சோதனை போட்டுப் பார்த்ததில், பணத்தை தவிர இந்த வீட்டு அட்ரஸ் இருந்தது. அப்புறம் இந்த கல்யாண பத்திரிக்கை இருந்தது. பாவம் கல்யாணத்திற்கு போய்க் கொண்டிருந்தவர்கள் போலிருக்கிறது!''

"சரி தகவல் தெரிவிக்கலாம் வாருங்கள்'' என், தலைமை டாக்டர் தன் அறைக்கு சென்று தொலைபேசியில் அந்த அட்ரஸில் குறிப்பிட்டிருந்த டெலிபோன் நம்பருக்கு டயல் செய்தார். அது ஜெய்குமார் வீடு, கிராமக்கிலிருங்க அவன் அப்பா எடுத்தார்.



# 22

தன் உடம்பின் சக்தி முழுவதையும் உறிஞ்சி நடைப் பிணமாக்கப்பட்டது போல் உணர்ந்தாள், சௌக்யா. பூமி காலடியில் நழுவுவது போல இருந்தது. கடைசியில் நான் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று. இனி இந்த பாலனோடு தானா என் வாழ்க்கை? கண்களில் உருண்ட கண்ணீரை, ஹோமப் புகையால் வந்ததென்று எண்ணி துடைத்துக் கொள்ள கர்ச்சீப் கொடுத்தான் பாலன். அழுவதா... சிரிப்பதா...

முதல் சுற்று அக்னியை சுற்றி முடிந்ததும், இரண்டாம் சுற்று அடியெடுத்து வைக்கும் முன் இவள் கையை உதறிவிட்டு, நெஞ்சை ஒரு கையால் பிடித்தவாறே கண்களை இறுக்கமாக பாலன் மூடிக் கொள்ள, வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது.

இதற்குள், "என்னடா.. என்னாச்சு...''என்றவாறே மண மேடையை நோக்கி அவன் அப்பா ஓடிவர, சௌக்யாவிற்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குள் அவன் மயங்கியே விட்டான். சௌக்யாவின் அம்மா சமயோசிதமாக கூறினாள்.

"என்னங்க? நம்ம டாக்டர் பரமசிவம் கல்யாணத்துக்கு வந்திருக்கிறாரே, அவரைக் கூப்பிட்டு என்ன, ஏதென்று கேளுங்க.'' அவள் முடிக்கக் கூட இல்லை. அதற்குள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தார், அவர்கள் பேமிலி டாக்டர் பரமசிவம்.

பரிசோதித்து விட்டுத் திரும்பியவர் முகம் பெயறைந்தாற் போலானது. ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. பையனின்

தகப்பனைப் பார்த்து ''இது மாதிரி ஏற்கனவே மயங்கி விழுந்திருக்கிறாரா... மாப்பிள்ளை...''

''ஆங்... இது மாதிரி ஏற்கனவே இரண்டு முறை ஆயிருக்குங்க...''

டாக்டர், கிருஷ்ணனின் காதில் ஏதோ சொல்ல, அவர் அடிவயிற்றிலிருந்து கூக்குரல் எழும்பியது.

''ஐயோ! சூடா.. மோசம் போயிட்டமேடி மாப்பிள்ளை மாரடைப்பில் போயிட்டாராமேடி...''

''என்னது.. பாலா.. பாலா.. ஐயோ என்ன டாக்டர் சொல்றீங்க'' அவன் அப்பா...

''ஆமாங்க! இரண்டாவது மாசிவ் ஹார்ட் அட்டாக் உங்க பிள்ளைக்கு வந்திருக்கு. ஏற்கனவே ஒரு முறை வந்திருக்கு. உங்களுக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கணும். ஹார்ட் வீக்கா இருக்கறதுனால, எதுவும் சட்டென்று ஹார்ட்டை பாதிக்கும். கல்யாணம் பண்றதே ரிஸ்க்னு உங்க டாக்டர் சொல்லலியா.''

''அய்யோ... பாவி மனுஷா ஏமாத்தி எம்பொண்ணை நிமிஷத்துல விதவையா நிக்க வைச்சிட்டீங்களே. மறைச்சு கல்யாணம் பண்ண நாங்க தானா கிடைச்சோம்.'' சூடாமணி பொரிந்தாள்.

''அம்மா... அப்படியெல்லாம் இல்லைம்மா... கல்யாணம் ஆனா சரியாகவும் வாய்ப்பிருக்குன்னாங்க. அதான் உசிருக்கு ஆபத்துன்னெல்லாம் எங்களுக்கு மாரியாத்த மேல சத்தியமா தெரியாதும்மா. எங்க பையனைப் பறிகொடுத்துட்டு நிக்கறோம். பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்கம்மா,'' பாலனின் அம்மா கதற.

பெரிதும் பாதிக்கப்பட்ட சௌக்யாவோ, திக்பிரமை பிடித்தது போல் நின்றிருந்தாள்.



# 23

ஜெய்குமாரின் அம்மாவும், அப்பாவும் மருத்துவ மனையை அடையும் போது, வாசலிலேயே கதற ஆரம்பித்திருந்தாள், அம்மா. ''ஒருத்தன் ஸ்பாட் அவுட்டாமே? என்னங்க, ஜெய்குமாருக்கு ஒண்ணும் ஆகியிருக்காதுல்ல.''

''சரி சரி... இது ஹாஸ்பிடல். நீ புலம்பாம வா... என்ன ஏதுன்னு கேட்போம்.''

அவரால், தன் மனைவியை அதட்ட முடிந்ததே தவிர, அவராலும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. போய் பார்த்தவுடன் தெரிந்தது. கோகுல் அந்த இடத்திலேயே உயிரை விட, ஜெய்குமார் கோமா நிலையில் இருந்தான்.

''நீங்க தான் இவரோட அப்பா, அம்மாவா... ஒரு நிமிஷம் ரூமுக்கு வாங்க...'' என்று அழைத்துப் போனார் தலைமை டாக்டர்.

ஆச்சு... எல்லாம் முடிந்து கோமா நிலையிலேயே ஜெய்குமாரை கிராமத்து வீட்டிற்கு கொண்டு வந்து விட்டனர்.

பார்க்க வந்த நண்பர்களும் 'இந்நேரம் சௌக்யாவை கல்யாணம் பண்ணி குடித்தனம் நடத்தி கொண்டிருக்க வேண்டியவன் இப்படி கோமாவில் வீழ்ந்து கிடக்கிறானே. இந்நேரம் சௌக்யாவின் திருமணம் நடந்து விட்டிருக்கும்' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டாலும் கோகுலின் முடிவு எல்லாவற்றையும் உலுக்கி விட்டிருந்தது. ஜெய்குமாரின் உயிர்த் தோழன் அவன். ஜெய்குமார் கோமாவிலிருந்து மீண்டதும் எப்படி இந்தச் செய்தியைத் தாங்கப் போகிறானோ...

நண்பர் கூட்டம் முடிந்த மட்டும் உதவிவிட்டுப் போக, உறவினர் கூட்டம் விசாரித்துப் போக, ஜெய்யுடன் தனித்து விடப்பட்ட அவன் அப்பாவும், அம்மாவும், அவனைப் பார்த்து தினசரி கண்ணீர் விடுவதே தொழிலாகப்போனது.

ஒரு மாதமிருக்கும், திடீரென அதிசயம் போல, ஜெய் குமாருக்கு பரிபூரண நினைவு வந்துவிட்டது.

அவனை தினமும் வந்து பரிசோதித்து விட்டுப் போகும் டாக்டருக்கே இது ஆச்சரியம் தான். மலங்க மலங்க விழித்தவனுக்கு ஒரு மணி நேரத்திலேயே முழு நினைவும் வந்துவிட்டது.

அம்மா, அப்பாவிற்குப் பின், சௌக்யா தான் நினைவிற்கு வந்தாள். என்னவாயிற்றோ, தெரியவில்லையே.

எனக்காகக் காத்திருந்து இருந்து கடைசியாய் பாலனுக்கு கழுத்தை நீட்டியிருப்பாளோ... அந்தப் பெண் மனம் என்ன பாடுபட்டிருக்கும், பின் அவள் என்னை ரூமில் எல்லாம் தேடியிருப்பாள், ஒரு மாதமாக அது பூட்டியே அல்லவா இருந்திருக்கும். எனக்கு என்ன ஆனதென்றே தெரியாமல் அல்லவா இருப்பாள்...

நம்பிக்கை வார்த்தைகளை அள்ளித் தந்துவிட்டு கழுத்தறுத்துவிட்டேன் என என் மீது அவ்வளவு கோபமும், ஆத்திரமும் பட்டிருப்பாள்.

ச்சே... என்ன மனிதன் நான் என்னை நம்பியிருந்த பெண்ணை கை பிடிக்க முடியாமல் போய்விட்டதே... மனதிற்குள் மறுகினான்.

அம்மாவிடம், ஏதாவது கேட்டுப்பார்க்கலாம் என்றாலும், ''நீ எதற்கு அதைக் கேட்கிறாய்... உனக்கு எப்படி அவளைத் தெரியும்'' என்றெல்லாம் கேட்டால்... நல்ல வேளையாக, அவன் அம்மாவே ஏதோ பேச்சு வாக்கில்



சொன்னாள். ''உனக்குத் தெரியுமா.. உனக்கு எப்படித் தெரிந்திருக்கப்போகிறது. நீயே இப்பத்தானே எழுந்துண்டுருக்கே...'' என்று கேள்வியும், கேட்டு பதிலும் சொன்னவள் தொடர்ந்தாள். ''நம்ம சொர்ணாவின் அண்ணன் பெண் சௌக்யாவோ, பாக்யாவோ அந்தப் பெண்ணிற்கு கல்யாணம் நடக்கறதா இருந்ததுல்ல அன்னிக்கு தான் நீ அடிபட்டு விழுந்த... அந்தப் பொண்ணு பாவம்...''

அம்மா சொல்ல சொல்ல அவனுக்கு நெஞ்சு துடித்தது. பி.பி. தாறுமாறாக எகிறியது... அடுத்த வார்த்தைக்காக காதுகள் விறைத்தன. ''அந்தப் பொண்ணு பாவம்'' அப்படியென்றால் கல்யாணம் எந்தக் காரணத்திலாவது நின்றுவிட்டதா?

## 24

''என்னம்மா ஆச்சு... அந்தப் பொண்ணிற்கு...'' ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் வந்து விழுந்தன வார்த்தைகள்.

''அதை ஏண்டா கேக்கற... அந்த பொண்ணுக்கு பாத்த மாப்பிள்ளைக்கு ஹார்ட்டுல ஏதோ ப்ராப்ளமாம். அதை சொல்லாம, கல்யாணம் பண்ணியிருக்காங்க. மணமேடையிலேயே அந்த மாப்பிள்ளை பையன் பொட்டுனு போய்ட்டான்.''

''ஐயோ சௌக்யா.. உனக்கா இந்த நிலைமை'' என்று உள்மனம் கூறியது.

இவன் மனநிலை தெரியாமல் அவன் அம்மா விட்டதைத் தொடர்ந்தாள்.

''அந்தப் பொண்ணு பாவம் என்ன ராசியோ தாலி ஏறின சில மணி நேரத்திலேயே அதத் தொலைச்சிட்டு நின்னா

பாரு எந்தப் பெண்ணிற்கும் அப்படி ஒரு நிலைமை வரக்கூடாது.''

''அவங்க அதே வீட்டுலதான இருக்காங்கம்மா.''

''எங்கே... அந்தப் பொண்ணு சௌக்யாவுக்கு இப்படி ஆயிடுச்சேன்னு அந்தாளு... அதான் அவங்க அப்பா புலம்பி பைத்தியம் மாதிரி ஆயிட்டார். ''என்னால் தான் இப்படி ஆச்சு..'' என்று மறுகி மறுகி பத்து நாளுல வராத நெஞ்சு வியாதி அவர்க்கு வந்திடுத்து... அப்புறம் அந்தப் பெண்ணும், அந்தம்மாவும் வேற ஊருக்குப் போயிட்டாங்க.. எந்த ஊருக்குப் போனாங்கன்னு நம்ம தெரு விஷயமெல்லாம் விரல் நுனியில வைச்சிருக்கிற வேலைக்காரி ரத்தினத்துக்கே தெரியலன்னா பாரேன்.''

சௌக்யாவின் இன்றைய நிலைக்கு தானும் ஒரு காரணமென எண்ணி எண்ணி மனம் கலங்கியதைத் தவிர ஜெய்குமாரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நாட்கள் நகர காலம் என்னும் வைத்தியன் அவன் உள்ளத்திற்கு மருந்திட அந்தக் காயம் மெல்ல ஆற தொடங்கியது. சென்னையின் ''சௌபாக்கியா பைனான்ஸ்'' நிறுவனம் தன் எல்லைகளை விரிவுபடுத்த, தமிழ் நாடெங்கிலும், ஆட்களைப் பணிக்கு எடுக்க, விளம்பரம் கொடுத்தது. அந்த விளம்பரம் பார்த்து, வேலை தேடிக் கொண்டிருந்த ஜெய்குமார் சென்னையிலும், துக்கத்தை மறக்க, மாற்றத்தை விரும்பியும், ஓரளவுக்கு வீட்டின் நிதி நிலைமையை சீர் செய்யும் சௌக்யா கோயமுத்தூரிலிருந்தும் அப்ளை செய்தனர், ஒருவருக்கொருவர் அறியாமலேயே.

காலப்போக்கில், ஜெய்குமாருக்கும் ஜனனிக்கும் விவாகம் நடந்து, பூஜிதா பிறந்த வேளை அது.

கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு விருப்ப மாறுதலில், வந்திருப்போர் பெயரில் சௌக்யா என்ற பெயரும்



இருந்தது. ஜெய்குமார் சந்தேகப்பட்டதைப் போலவே, அவன் விரும்பிய சௌக்யாவே விரும்பாத தோற்றத்தில் இவன் அலுவலகத்திற்கே வந்து சேர்ந்தாள்.

# 25

''என்னக்கா... என்னவோ போலிருக்கே... சௌக்யா ஆன்ட்டி வீட்டிலிருந்து ஒரு டைரியை வாங்கிட்டு வந்ததுமே அதை எக்ஸாமுக்கு படிக்கற மாதிரி படிச்சே... அதிலிருந்து நீ சரியில்ல. என்னக்கா... என்கிட்டே சொல்லுக்கா...''

சுஜா கேட்க... பூஜிதாவிற்குள் தயக்கம். நான் சொன்னால் இவளுக்குப் புரியுமா...

ஆனாலும் யாரிடமாவது சொல்ல வேண்டும். தனக்குள் சிறு பொறியாய் தோன்றிய ஒரு விஷயத்தை பற்றி, முடிவுக்கு வரவேண்டும் போலிருந்தது.

நடந்த எல்லாவற்றையும் கூறினாள், சுஜிதாவிடம்.

''சுஜா... உனக்கு சௌக்யா ஆன்ட்டியைப் பார்த்தா என்ன தோணுது? நம்ம அம்மா ஞாபகம் வருது... சௌக்யா ஆன்ட்டி நம்ம அம்மா மாதிரி இருந்தா நல்லா இருக்கும்ல. அம்மாவை, ரொம்ப மிஸ் பண்றேன்,'' - பூஜா.

''ஒவ்வொரு நாளைக்கு நீ தூங்கனப்பறம் கூட எனக்கு தூக்கம் வராது, தெரியுமா... அம்மா ஞாகபம் வந்துடும், அம்மா அடிக்கடி கட்டிப்பாங்களே..அந்த கருப்புல இலை மாதிரி போட்ட புடவை அதை அணைச்சிண்டா அம்மாவே வந்து தூங்கப் பண்ற மாதிரி இருக்கும்....''

பூஜாவிற்கு அந்த பதிமூன்று வயதிற்கு மீறின சிந்தனை தான் என்றாலும் இன்றைய சினிமா எல்லாவற்றையும் வீட்டு ஹாலுக்கே கொண்டு வந்து கற்று கொடுக்கிறதே.

''சுஜா... நாம் அப்பாகிட்டே சொல்லி சௌக்யா ஆன்ட்டியை கல்யாணம் பண்ணிக்க சொல்லலாமா...''

மனதில் இருந்ததைக் கொட்டி விட்டாளே, தவிர பூஜாவிற்கு அதற்கு மேல் பேசத் தெரியவில்லை. சுஜாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

பூஜாவே தொடர்ந்தாள். ''நீ, நான், சௌக்யா ஆன்ட்டி, அப்பா நாலு பேருமே ஏதோ ஒரு வகையில...

''ஒவ்வொன்றை இழந்திருக்கோம். அம்மா, அன்பை, நாம இரண்டு பேரும் எவ்வளவு மிஸ் பண்றோம். இல்ல... என்னிக்கோ ஒரு நாள் சௌக்யா ஆன்ட்டி நம்மைப் பாத்துக்கறதுக்கே, எவ்வளவு சந்தோஷமா ஃபீல் பண்றோம். அது டெய்லி தொடர்ந்தா எவ்வளவு நல்லா இருக்கும்...''

''அப்பாவும் பாரு... முதலில் சௌக்யா ஆன்ட்டியை கல்யாணம் பண்ணிக்க நினைச்சிருக்காரு. அதுவும் நடக்கல. பின்னாடி, அம்மா கூடவும் ரொம்ப நாள் வாழல...''

''ஆன்ட்டி கூட வேற யாரையாவது கல்யாணம் செஞ்சிக்கணும்னு நினைச்சு மறு கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கலாம். அப்படி செய்யாம இருக்காங்கன்னா அதுக்கு நம் அப்பாவை இன்னும் நினைச்சிட்டுக்கறதா தானே அர்த்தம்.''

''இப்ப அம்மா போனப்பறம் கூட, அப்பாவோ, ஆன்ட்டியோ பழகுற கன்னியத்துக்காவே நாம அவர்களை சேர்த்து வைக்கணும்'' - சுஜா, ''ஆமாம் பூஜா நீ சொல்றது ரொம்ப சரி.. அப்பாகிட்ட நீ சொல்றயா.''

''ஆமாம். அதுக்கான சரியான சந்தர்ப்பம் தானாகவே வாச்சிருக்கு... நாளைக்கு என்ன நாள் சொல்லு பார்ப்போம்.''

''அப்பாவோட பிறந்த நாள்.''

''கரெக்ட்... நீ நான் சொல்றபடி செய் போதும்...'' பூஜா சொல்ல, சுஜா தலையாட்டினாள்.



# 26

''ஹாப்பி பர்த்டே அப்பா'' இருவரும் கட்டிக் கொள்ள, ''ஹாய் குட்டிகளா'' என்ற ஜெய்குமார். ''அப்பா பர்த்டேக்கு என்ன வேணும்? பூஜா உனக்கு நியூ மிடி ஷர்ட், சுஜா உனக்கு ஜீன்ஸ் வாங்கலாமா...''

சுஜா ''இல்லப்பா.. நானும் அக்காவும் ஒண்ணு கேக்கறதா டிசைட் பண்ணியிருக்கோம். அதை கண்டிப்பா நீ செய்யணும்ப்பா.''

பூஜா என்ன ஏதென்னு சொல்வதற்குள், ''பிறந்த நாள் வாழ்த்துக்கள், மாப்ளே. பூஜா, சுஜா எப்படியிருக்கீங்கடா, கண்ணுங்களா? என்ன முக்கியமான விஷயம் பேசிட்டிருந்தாப்பல இருக்கு'' என்றவாறே உள்ளே நுழைந்தார்கள், ஜனனியின் அப்பாவும், அம்மாவும்.

''ஐ பாட்டி... ஐ... தாத்தா.''

''பாருங்க பாட்டி. பர்த்டே கிஃப்டா நாங்க ஒண்ணு கேட்டோம் டாடிகிட்ட'' முடிக்கவில்லை, பூஜா.

''எங்கே பூஜா... நீங்கதான் என்ன வேணுங்கறது சொல்லவேயில்லையே.''

''சொல்லட்டுமா... சொல்லட்டுமா.''

''ஆமா, மாப்பிள்ளை. கொழந்தைங்க ஆசையா என்னவோ கேட்க வராங்க... வாங்கிக் கொடுங்க...''

''எங்களுக்கு அம்மா வேணும்...'' குண்டூசியைப் போட்டாலும் அணுகுண்டாய் கேட்கும் நிசப்தம். ஜெய்குமார் மட்டுமல்ல, பெரியவர்கள் இருவரும் கூட இப்படியொரு பர்த்டே கிஃப்டை குழந்தைகள் கேட்பார்கள் என எதிர்பார்க்கவில்லை.

பொண்டாட்டி செத்ததும் மறுவருடமே திருமண செய்து கொள்ளும் ஆண்களுக்கு மத்தியில் குழந்

26836



களுக்காக வாழ்கிறவர் மாப்பிள்ளை. ஜனனி இறந்த அன்று ஜெய்குமார் கொட்டிய கண்ணீர் நிஜம்.

அப்படியிருக்க இத்தனை வருடங்களுக்கு பிறகு, குழந்தைகளுக்கு திடீரென அம்மா ஏக்கம் வந்துவிட்டது. அப்படியே ஆனாலும், குழந்தைகளின் மனதின் ஏக்கத்தை போக்கவாவது மாப்பிள்ளை மறு கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் தப்பில்லை.

அதையே கூறவும் செய்தனர், ஜெய்குமாரிடம்... "இல்ல அத்தை... உங்களுக்குத் தெரியாதா... எனக்கு அப்படி ஒரு எண்ணமே எப்போதும் இருந்ததில்லை."

"இல்ல மாப்ளை... குழந்தைகள் சொல்லறதுலயும் அர்த்தமிருக்கு. உங்க வாழ்க்கையிலும், சரி குழந்தைங்க வாழ்க்கையிலும் சரி, இன்னமும் எவ்வளவோ இருக்கு. இன்னிக்கு, நாளையோட முடியப்போறதில்ல. நாங்க, தெரிஞ்ச பொண்ணுங்களைப் பார்க்கறோம். ஜனனியை பெத்த நாங்களே சொல்லும்போது, என்ன மாப்பிள்ளை? யோசனை செய்ங்க..."

"அதுக்கு அவசியமே இல்லை, பாட்டி... நாங்க சொல்ற அம்மாதான் எங்களுக்கு வேணும். நாங்களே அம்மாவை அறிமுகப்படுத்துறோம்." விஷயத்தை சொல்லாமல்,

பூஜாவும், சுஜாவும் போன் பண்ணி ஏற்கனவே வரச் சொல்லியிருந்ததால், சௌக்யா அப்போது வர... "அம்மா" என்றவாறே போய் கட்டிக் கொண்டனர். பூஜாவும், சுஜாவும்.

அப்பாவின் உள் மனதின் ஓரத்தில் அது எவ்வளவு சந்தோஷத்தை கொடுத்திருக்கும், என்றெண்ணி இருவரும் ஒருவர்க்கொருவர் பார்த்து புன்னகைத்துக் கொள்ள, புரியாமல் நின்றாள், சௌக்யா....!

641 001